Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | வைகாசி 13 | வெள்ளிக்கிழமை | (27.05.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 240

(C/720)
Job! With High Salary
Follow

Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.




ரஷ்யாவில் தொடரும் சர்ச்சை (13)



இலங்கையில் மீண்டும் குழப்பநிலை ஏற்படும் (08)



தென்னிந்திய கிரிக்கெட் கப்டன் (12)



15 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த தளபதி கைது (15)

# ஐ.நா.செல்கிறது யாழ்.முஸ்லிம்கள் பிரச்சினை



(கொழும்பு)

புலிகளால் யாழ்ப்பாணத்தில் இருந்து சுமார் இரு தசாப்த காலத்துக்கு முன் விரட்டப்பட்ட முஸ்லிம்கள் குறித்து ஐ.நா. சபை கவனம் எடுக்க வேண்டும் என்று கோரி சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு புலம்பெயர்ந்த இலங்கை வடக்கு முஸ்லிம் சம்மேளனம் அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பிரதிகள் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஐ.நாவின் கொழும்பு அலுவலகம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி இரண்டு மணிநேர அவகாசத்தில் புலிகளால் பாரிய இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். இக் கொடுமை இடம்பெற்று தற்போது 20 வருடங்கள் கழிந்து விட்டன. சொந்தப் பிரதேசத்தில் வாழ்கின்றமை ஓர் அடிப்படை உரிமை என்கிற வகையில் இவ்விவகாரத்தை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நாம் கோருகிறோம்.

பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் இலங்கை அரச பிரதிநிதிகளும், சர்வதேச அரச சார்பற்ற பேராளர்களும் கலந்துகொண்டு, மனித உரிமைகள் குறித்து ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் ஆராய இருக்கின்றார்கள்.

இக்கூட்டத் தொடரில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் மனித உரிமைகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டுமென உங்களிடம் கோரிக்கை விடுகின்றோம் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.



# இலங்கை-இந்திய உறவை உடைக்க முயல்கிறது ஜே.வி.பி.

## தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை-இந்திய உறவை உடைப்பதற்கு ஜே.வி.பி. திரைமறைவில் முயற்சி செய்து வருவதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நெருங்கிய நட்புறவைப் பலப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துவரும் வேளையில், அதைச் சீர்குலைக்கும் செயற்பாடுகளை ஜே.வி.பி. மேற்கொள்வதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. எம்.பி. அநுரகுமார திசாநாயக்க இலங்கை - இந்திய வெளிநாட்டமைச்சர்களின் அண்மைய கூட்டறிக்கை தொடர்பான விசேட அறிக்கையொன்றை முன்வைத்தார். இது தொடர்பில் அவர் உரையாற்றுகையில் - இவ்வறிக்கையானது இலங்கையின் இறைமை- பாதுகாப்பு- பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியா தலையீடு செய்வதையே காட்டுகிறது எனவும் இதற்கு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்தன- வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தற்போது வெளிநாட்டு விஜயமொன்றில் ஈடுபட்டுள்ளதால் அவர் நாடு திரும்பியதும் அநுரகுமார திசாநாயக்கவின் கேள்விகளுக்கு அவர் விரிவான பதிலளிப்பார் எனவும் தெரிவித்தார்.

# 38 ஆயிரம் பேருக்கு வடக்கின் வசந்தம் கடன்

## யாழில் 4 ஆயிரம் மி.ரூபா வழங்கப்பட்டது



படப்பிடிப்பு: மயூரன், கஜீபன்.

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு ஆண்டுகளில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வங்கிகளால் 38 ஆயிரம் பேருக்கு 4 ஆயிரம் மில்லியன் ரூபா கடனாக வழங் கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் இ.சிறிதரன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ்.பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் 'யாழ். மாவட்டத்தில் வங்கிக் கடன் வசதிகள்' என்னும் தொனிப் பொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் 'அபிவிருத்திக் கடன்கள் ஓர் அறிமுகம்' எனும் தொனிப்பொருளில்'

(15ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை வெட்டுப்புள்ளி இன்று வெளிவரும்

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் இன்று வெளியிடப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்ட பின்னர், பல்கலைக்கழக நுழைவுக்கான விண்ணப்பங்களும் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## யுத்த வெற்றிவிழா

(கொழும்பு)

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெறும் வெற்றி விழா நிகழ்வுகள் இன்று காலிமுகத்திடலில் இடம்பெறுகின்றன.

ஆயுதப் படைகளின் அணிவகுப்புக்கள், விமானப்படையின் சாகச நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும் இதில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

## ஐ.தே.க.பங்குபற்றும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க கலந்துகொள்வார் என ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில், தமது கட்சியின் உறுப்பினர்கள் பங்குகொள்ளமாட்டார்கள் என ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

தாம் படைவீரர்களுக்கு மதிப்பளிப்பதிக்கும் அதேசமயம், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் தாம் இதனைப் புறக்கணிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## ஆஸியின் அகதி முகாம்கள் சட்ட விதிகளுக்கு முரணானது

### ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் குற்றச்சாட்டு

(ஜெனிவா)

குடியேற்றவாசிகளை தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்திருக்கும் அவுஸ்திரேலிய அரசின் நடவடிக்கைகள் சர்வதேச சட்ட விதிகளுக்கு முரணானவை என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாத நிலையில் பெருமளவிலானவர்களை நீண்டகாலமாக தடுப்பு முகாம்களில் அடைத்து வைத்திருப்பதானது சர்வதேச சட்டவிதிகளுக்கு முரணானது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

நேற்று முன்தினம் அவுஸ்திரேலியாவின் கான்பரா நகரில்

(15ஆம் பக்கம் பார்க்க)

## மனைப்பொருளாதார திட்டம் யாழ்.குடாநாட்டில் ஆரம்பம்

(கட்டுவன்)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சினால் மனைப்பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயம், மீன்பிடி, கால்நடை ஆகியன தொடர்பாக பயிற்சி அளிப்பதற்கு ஒவ்வொரு பிரதேச செயலகத்தினூடாக குறிப்பிட்ட தொகை பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்கு 193 பயனாளிகளைத் தெரிவு செய்து அவர்கள் தொடர்பான விபரங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சியில் மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாவும் தொழிலை மேற்கொள்வதற்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய பிரதேச செயலகங்களிலும் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (29)

**மாணவச் செல்வங்களே**

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I, பகுதி II இன் விடைகளும், கற்பித்தல செயற்பாடுகளும் இணைக்கப்பட்டுள்ளன.

# பொறுப்புணர்வுடன் செயற்படுங்கள்; பணியாளர்களிடம் நகர முதல்வர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை குறித்தும் முதல்வர் குறித்தும் பத்திரிகைகளுக்கு தகவல் கொடுக்கும்போது யாழ். மாநகரசபை சார்ந்த சகலரும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளுமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேட்டுக்கொண்டார்.

நேற்று யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டத்தில் அதற்கு தலைமையேற்று அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வேண்டுகோளை விடுத்தார்.

கடந்த சில நாட்களாக யாழ். பிராந்தியப் பத்திரிகை ஒன்று யாழ். மாநகரசபை முதல்வர் தொடர்பாக தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றமை, அப்பத்திரிகைக்கு இங்கிருந்துதான் தவறான தகவல் கொடுக்கப்பட்டு வருகின்றது.

அப்படி முதல்வர் எதுவித ஊழல் மோசடியில் ஈடுபடவில்லை. அப்படியாயின் கணக்காய்வின் மூலமாக அது பிடிபட்டிருக்கும் வேண்டுமென்றே தவறான தகவல்கள் மாநகரசபை சார்ந்தவர்களிடம் இருந்து குறித்த பத்திரிகைக்கு வழங்கப்படுகிறது.

எனவே இவ்வாறான தகவல்கள் வழங்கும் யாழ். மாநகரசபை சார்ந்தவர்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

நேற்றைய மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது யாழ். மாநகரசபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினை ஆளும்கட்சி உறுப்பினர்களிடத்திலும், எதிர்க்கட்சி உறுப்பினர்களிடத்திலும் காரசாரமான விவாதங்களைத் தோற்றுவித்தது.

யாழ். மாநகரசபையின் நிரந்தர சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக 255 பேர் பணி புரிகின்றனர். இவர்களில் சுமார் 90 வரையானவர்கள் லீவு எடுப்பதால் சுத்திகரிப்புத் தொழிலாளர் பற்றாக்குறையாக இருப்பதன் காரணமாக தற்காலிகமாக 148 வரையான தொழிலாளர்கள் மேலதிகமாக பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிலும் சுமார் 40 வரையானவர்கள் லீவு எடுத்து வருவதனால் சுத்திகரிப்புத் தொழிலாளர் பிரச்சினை தொடர்ந்து கொண்டே இருப்பதாகவும், மேலும் சுத்திகரிப்புத் தொழிலாளர் தேவையாகவுள்ளதாகவும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் தரப்பில் கருத்து முன்வைக்கப்பட்டதுடன், அவர்கள் மூலமாக மாதாந்தம் 12 இலட்சம் ரூபா வருமானமாக ஈட்டப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டது.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாதாந்தம் 12 இலட்சம் ரூபா வருமானமாக ஈட்டித்தரும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு சம்பளமாக 60 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது.

இதன்மூலமாக யாழ். மாநகரசபையின் நிதி விரயமாவதாகவும், அத்துடன் அவ்வாறான சுகாதாரத் தொழிலாளர்களால் திருப்திகரமாக வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குற்றம்சாட்டினார்.

அத்துடன் அவ்வாறு திருப்திகரமாக வேலை வாங்கமுடியாத சுத்திகரிப்புத் தொழிலாளர்களை பணியில் இருந்தும் நீக்குமாறும் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். மாநகரசபை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியின் மூலமாக வீதிகள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் என்பன அமைத்துக் கொடுப்பதற்கு யாழ். மாநகரசபை அதிகாரிகள் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அந்தந்த ஆண்டிலேயே அவற்றை முடித்துக் கொடுக்கக்கூடியதாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (பா)

# தாவடி இந்து மயானம்; புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாண்ணம்)

வலி.தெற்கு தாவடி இந்து மயானத்தின் அபிவிருத்திச் சபைக் கூட்டம் அனைவரினதும் ஒத்துழைப்புடன் தாவ்டி இந்து மயானத்திற்கு அருகாக உள்ள வீதியில் நடத்தப்பட்டதாக வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி எம்.சுலோசனா தெரிவித்துள்ளார்.

பிரதேச சபை செயலாளர் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கூட்டம் நடைபெற்றது. இதில் இந்த மயானத்தைப் பயன்படுத்தும் 5 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மயானத்தை சீராக நிர்வகிப்பதற்காக புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு,

தலைவர் - சி.சிவரூபன், உப தலைவர் - சு.காந்தரூபன், செயலாளர் - வீ.அகிலன், உப செயலாளர் - அ.பாலசுப்பிரமணியம், பொருளாளர் - எஸ்.சுஜீவன்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் - அ.சொக்கலிங்கம், நா.கமலநாதன், சே.அசோக்குமார், பரமேஸ்வரன், வேலாயுதபிள்ளை, அப்புத்துரை. (கா)

# யாழ். மாநகர சபையில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையில் நேற்று கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

யாழ். மாநகரசபையின் நேற்றைய மாதாந்த பொதுக் கூட்டத்தின்போது யாழ். மாநகரசபையின் வளாகத்திற்குள் மூன்றாவது கேற் வழியாகவே அனைவரும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ். மாநகரசபை வளாகத்திற்குள் செல்வதற்கான பிரதான வாயில் கேற் மூடப்பட்டிருந்ததுடன், அதில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் இரண்டாவது பாதையும் அவ்வாறு மூடப்பட்டிருந்ததுடன், மூன்றாவது கேற் வழியாகவே அனைவரும் மாநகரசபை வளாகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த யாழ். மாநகரசபையின் மாதாந்த கூட்டத்தின்போது தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்ததாக யாழ். மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் விடுத்திருந்த கோரிக்கையையடுத்து இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என யாழ். மாநகரசபை வட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது.

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை (தரம் III பாடசாலை) அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளதாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, 2-I, 2-II (பட்டதாரி ஆசிரியர்) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவங்களை மருதனார்மடத்திலுள்ள வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்பாக வலயக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளார். (கா)

# மின் தடை

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின் மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும்,

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெயபுரத்திற்கு பஸ் சேவை எப்போது?

(பூநகரி)

யாழ்ப்பாணத்தில் இருந்து ஊடாக மன்னார் செல்லும் பேருந்துகளும், மன்னாரிலிருந்து பூநகரி ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகளும் தற்போது ஜெயபுரம் வரை சென்று பயணத்தை மேற்கொள்வதில்லை எனவும், இதனால் அப்பிரதேசத்தில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் குறித்த பிரதேசத்திற்கு சென்று செல்லும் பேருந்துகள் தற்போது இவ்வாறு செல்லாது பயணத்தை மேற்கொள்வதால், ஜெயபுரம் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட ஏனைய அரச உத்தியோகத்தர்கள் 2 கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்து செல்லவேண்டிய அவல நிலை இருப்பதாக கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

ஜெயபுரம் பகுதியிலிருந்து வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் 2 மைல் தூரம் நடந்து சென்று பிரதான வீதியால் செல்லும் பேருந்தில் ஏறி முழங்காவில் அரசினர் வைத்தியசாலைக்கு செல்லவேண்டியிருப்பதாகவும், அதுமட்டுமல்லாமல் அவசர நிலையிலும் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு சிரமத்தின் மத்தியில் செல்வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெயபுரம் பகுதி மக்கள் படும் சிரமத்தை குறைக்கும் வகையில் அனைத்து பயணிகள் பேருந்துகளும் ஜெயபுரம் வரை வந்து திரும்பிச் செல்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப்பகுதி மக்களும், கல்விச் சமூகத்தினரும் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# அன்னை வேளாங்கன்னி பெருவிழா

(குருநகர்)

ஊர்காவற்துறை, கரம்பொன் தெற்கு அன்னை வேளாங்கன்னி மாதா ஆலய 35 ஆம் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் கோலாகலமாக நடைபெறும்.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனி நடைபெறும். நிறைவாக சொரூப ஆசீர் வழங்கலுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவெய்தும்.

நாளை மாலை 4 மணிக்கு நற்கருணை விழா இடம்பெறும். திருப்பலி, நற்கருணைப் பவனி மற்றும் ஆசீர்வாதம் என்பன நடைபெறும். (68)

# வலுவூட்டாளர்கள் இன்று தெரிவு

(கட்டுவன்)

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் கிராம வலுவூட்டாளர்களாக 4 பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள வைபவமொன்றின்போது மாவிட்டபுரம், வீமன்காமம், நகுலேஸ்வரம், பளை வீமன்காமம் தெற்கு ஆகிய பிரதேசங்களில் வலுவூட்டாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (29)

# கடன் பெறுவோருக்கு நேர்முகப் பரீட்சை

(வேலணை)

புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு, சங்கானை ஆகிய பிரதேசங்களில் மீள்குடியமர்ந்த மக்களுக்கு கடன் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இதில் இக் கடன் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மகிழ்வூட்டல் செயலமர்வு

(பூநகரி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மகிழ்வூட்டல் செயலமர்வு நேற்று ஆரம்பமாகி இன்று இரண்டாவது நாளாக கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறுகிறது.

இதேவேளை எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளில் பூநகரி மகா வித்தியாலயத்திலும் அடுத்த கட்டமாக இச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

மேலும் இச்செயலமர்வு கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வளவாளர்களால் நடத்தப்படுவதாக கிளிநொச்சி வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (110)

தனக்கு தொல்லைதராத எதைப்பற்றியும் மக்கள் கவலைப்படமாட்டார்கள். ஆகவே ஏதாவது ஒன்றை உணர்த்த வேண்டுமானால் அவர்களின் மனதைத் தாக்கும் வகையில் உணர்த்தவேண்டும். இல்லையானால் உணர்த்தாமல் இருப்பது நல்லது.

- பெர்னாட்ஷா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# மக்களை மனதில் கொள்க!

"அபிவிருத்தித் திட்டங்கள் மட்டும்தான் எமது இலக்கல்ல. அபிவிருத்திக்கு முன் அரசியல் உரிமைகள் வழங்கப்படவேண்டும். அற்ப சொற்ப நலன்களுக்காக தமிழ் மக்களின் உரிமையை யாருக்கும் விட்டுக்கொடுக்க முடியாது" என்று சமீபத்திலும் ஒரு தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதி சூளுரைத்துள்ளார்.

இந்த வீர முழக்கங்கள் வெருட்டல்களையே, மக்களின் வாழ்விழப்பு அவலங்களுக்கு ஒரே பதிலாக இன்னும் எவ்வளவு காலத்திற்குச் சொல்லிக்கொண்டிருப்பார்கள் என்று தெரியவில்லை.

"அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தைகள் சரியாக இல்லை. அரசுக்கு தீர்வை வைக்கும் நோக்கம் இல்லை" என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டே மறுபுறம், "அரசியல் தீர்வுக்கு முன்னால் அபிவிருத்திகள் நடக்கவும் விடமாட்டோம்" என்று வஞ்சினமுரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசியல் தீர்வு வருகின்றதோ இல்லையோ, அதுவரை மக்கள் அல்லல் வாழ்வில் அழுந்திக் கிடக்கவேண்டும் என்று மேடைபோட்டுச் சொல்பவர்களுக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கவேண்டும்?

எதிர்ப்பும் வெறுப்புமான உணர்ச்சிகர உருகுநிலையில் மக்களை வைத்திருந்தால், அவர்கள் வீரம் தவிர வேறொன்றையும் எண்ண மாட்டார்கள் என்ற ஏமாற்றல்லவா இது! ஒருவித 'சாமி வந்த' நிலையில் வாழ்வைச் சிதைப்பதற்கே வாக்குகளைப் போடவைக்கும் வாய்சாலக தந்திரமல்லவா இது!

மக்களை அவலங்களுக்குள் வைத்திருப்பதும், அதனால் வரும் கோபத்தை அரசியல் பதவிக்கும் சுயலாபங்களுக்குமாகப் பயன்படுத்திக்கொள்வது குறித்து இவர்களுக்கு வெட்கம் உண்டாவது எப்போது? "மக்கள் நலன் மக்கள் நலன் என்றே சொல்லுவார். தம் – மக்கள் நலன் ஒன்றைத்தான் மனதில் கொள்ளுவார்" என்ற எம்ஜியார் பாட்டு இவர்களுக்குத்தானே அதிகம் பொருந்துவதாய் தெரிகிறது!

உணர்ச்சிகளைத் தூண்டியும், எழுச்சிகொள்ளப் பேசியும், யதார்த்தத்தை மறக்கடித்து மக்களை மாயவேட்டைக்கு இழுத்துச் சென்றபடியிருக்கும் ஏமாற்றை இன்னும் எவ்வள்வு காலத்துக்குத்தான் செய்வார்கள்? பகட்டான பேச்சுக்களோடு வாழ்வைச் சிதைத்துக் கொண்டிருப்பதல்ல, வாழவைத்தபடி உரிமைகளுக்குப் போராடுவதே மானுட அக்கறையுள்ளவர்களின் வழியாக இருக்கும்.

இராமனை தசரதன் வனவாசம் போகும்படி சொல்லியபிறகு மக்கள் அவனைத் தடுக்கிறார்கள். அந்நேரத்தில், வால்மீகியின் இராமன் வஞ்சினம் உரைக்கும் போது, தந்தை சொல்லை மீறினேன் என்றால் எனக்கு அந்தணர்களைக் கொன்ற பாவம் சேர்வதாக, வேள்வியை அழித்த பாவம் சேர்வதாக என்றெல்லாம் சொல்கிறான். ஆனால் கம்பனின் ராமனோ, தந்தை சொல்லை மீறினேன் என்றால் ஊர் உண்ணும் ஊருணியை அழித்த பாவம் என்னைச் சேர்வதாக என்கிறான். மக்களின் தேவைகள் குறித்த நீதியே கம்பன் மனதை ஆக்கிரமித்திருந்ததால் அவனுக்கு அதுவே பெரிதாகிறது.

மக்களின் பிரதிநிதிகள் மனதையும் ஆக்கிரமித்திருக்கவேண்டியது, மக்களின் அவலங்கள் களைந்து மேல் நகரும் வழியே அன்றி, மக்களது உணர்ச்சிகளை உசுப்பேற்றிவிட்டு பழைய தடத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதல்ல.

-ஆசிரியர்-

# வட,கிழக்கில் மனித உரிமை மீறல்; விசாரணை செய்ய ஐந்து நீதிபதிகள்



(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பாக புதிய விசாரணைகளை நடத்த ஐந்து நீதிபதிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

வட, கிழக்கில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற நீதியரசர் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

ஐந்து நீதிபதிகளைக் கொண்ட இந்தக் குழுவில் மூவர் சிங்களவர்களாகவும், ஏனைய இருவரில் ஒருவர் தமிழராகவும் மற்றையவர் முஸ்லிமாகவும் இருப்பார்.

உயர் நீதிமன்றத்தின் அல்லது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளே இந்தக் குழுவுக்கு நியமிக்கப்படவுள்ளனர். இந்தக் குழுவின் நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையின் கீழ் இந்தக்குழு சுதந்திரமான முறையில் செயற்படும்.

குறிப்பாக இந்தக்குழு இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தும். இடம்பெயர்ந்தோரின் பிரச்சினைகள் தொடர்பான ஏராளமாக மனிதஉரிமை மீறல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் தீர்வு காண முயற்சிப்போம் என்றார்.

ஐ.நாவின் அனுசரண்ணையுடன் கடந்தவாரம் ஜெனிவாவில் நடைபெற்ற ஆசிய பசுபிக் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தேன். அங்கு, இலங்கையின் மனிதஉரிமைகள் நிலை குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புதுப்பொலிவுடன் இயங்கவுள்ள கமநலசேவைத் திணைக்களம்

(சாவகச்சேரி)

மானிப்பாய் வீதி கைதடியில் அமைந்துள்ள கமநலசேவைத் திணைக்களம் தற்போது புனரமைக்கப்பட்டு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினால் இத்திணைக்களம் புனரமைக்கப்பட்டதுடன் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு திருத்த வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் விரைவில் இத்திணைக்களம் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்டகாலத்தின் பின்னர் இத்திணைக்களக் காணியில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு நிறப்பூச்சுக்கள் பூசப்பட்டு சுற்றுமதில்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. (19)

# கஷ்டப்பிரதேச கொடுப்பனவு வழங்கவில்லை என ஆசிரியர்கள் கவலை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அதிகஷ்ட பிரதேச கொடுப்பனவு இரண்டாயிரம் ரூபா வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

நகரப் பாடசாலைகள் தவிர்ந்த கிராமப்புறப் பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அதிக கஷ்ட பிரதேச கொடுப்பனவாக இரண்டாயிரம் ரூபா அவர்களது கடமைக் கொடுப்பனவை விட மேலதிகமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்தக் கொடுப்பனவு குறித்த பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்படுகிறது.

ஏ-35 வீதியிலிருந்து (முல்லை, பரந்தன் வீதி) சுமார் நான்கு கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள இப்பாடசாலை மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதாகவும், குறித்த வீதியில் அமைந்துள்ள பல பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்ற நிலையில், தங்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படாமையால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துத் தமக்கான இக் கொடுப்பனவினை வழங்க ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# மாமியார் கொலைச் சந்தேக நபருக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - பூநகரிப் பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் மாமியாரை வெட்டிக் கொலை செய்த சந்தேக நபரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சிமாவட்ட நீதிமன்ற நீதிபதி சிவகுமார் உத்தரவிட்டார். குறித்த மாதம் 5ஆம் திகதி கிளிநொச்சி - பூநகரி நெடுங்குளம் பகுதியில் குடும்பத்தகராறு காரணமாக மாமியாரை வெட்டிக்கொலை செய்தததுடன்; மனைவியையும் வெட்டிக்காயப்படுத்திய குறித்த கொலைச் சந்தேகநபர் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட நீதிபதி, குறித்த கொலை தொடர்பான இரு சாட்சியங்களினுடைய வாக்குமூலங்களைப் பெற்றதுடன், குறித்த நபரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (110)

# ஐந்து போத்தல் கசிப்புக்கு இருபதாயிரம் ரூபா அபராதம்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - அக்கராயன் பகுதியில் 5 போத்தல் கசிப்பை வைத்திருந்த நபர் ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது.

அக்கராயன் பொலிஸார் குறித்த நபரைக் கைதுசெய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த மாவட்ட நீதிபதி சிவகுமார், குறித்த குற்றவாளிக்கு இருபதாயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடுமாறு தீர்ப்பளித்ததுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். (110)

# புதிய அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலைக்குப் புதிய அதிபராக ந.சிவகடாட்சம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தரம் I தராதரமுடைய இவர் இதுவரை காலமும் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அறிவை வளர்க்கும் அற்புத பணியை விசுவாசத்துடன் ஆற்றவேண்டும்

**யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்**

(யாழ். நிருபர்)

கல்விப்பணியில் ஈடுபடுபவர்களைக் கடவுளே தேர்ந்தெடுக்கிறார் அறிவை வழங்குகின்ற அற்புத பணியைச் செய்கிற யாவரும் இறை விசுவாசத்துடன் சேவையை ஆற்ற வேண்டும் மனிதருடைய வாழ்நாள். குறுகியது இறைவன் தந்த கொடைத் திறத்தை உணர்ந்து பிறருக்குக் கெடுதிகள் செய்யாமல்வாழப் பழகுபவனே உண்மையான சமய வாழ்வைக் கைக்கொள்பவன் ஆகிறான். பிறருக்குக் கெடுதிகள் உண்டுபண்ண நினைத்து வாழ்ந்தால் வாழ்நாள் எல்லாம் வீணாய்க கழியும், நல்ல நேரிய சிந்தனைகளை மாணவர் உள்ளங்களில் ஊன்றச் செய்வதற்காகவே சமய விழாக்களை எடுக்கிறோம். என்று யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்தார்.

வண்ணை நாவலர் வித்தியாலய சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் நடத்தப்பட்ட திருஞானசம்மந்தர் குரு பூசை நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கழகத்தலைவரும் பாடசாலை அதிபருமான க. சிவபாத சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

நாம் பணியாற்றுகின்ற இடத்திற்கு எம்மால் நன்மை விளையக் கூடிய வகையில் பணிகளை ஆற்ற வேண்டும். அவ்வாறு சேவையை வழங்குவதில் உடன்பாடு இல்லாதிருக்குமெனில் நிறுவனத்தின் நன்மை கருதி அங்கிருந்து நிறுவனத்தின் நன்மை கருதி அங்கிருந்து தாமாகவே விலகிக் கொள்ள வேண்டும். பணியில் அர்ப்பணிப்பு என்பது மிகவும் பிரதானமானது. சைவ நாயன்மாரது அர்ப்பணிப்பே எமது சமயத்தை இன்றும் நல்ல நிலையில் வாழ் வைத்துக்கொண்டிருக்கின்றது. என்றார்.

நிகழ்வில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் மாணவ தலைவர்களுக்குச் சின்னங்களைச் சூட்டிக்கௌரவித்தார். ஆங்கில ஆசிரியர் க.இரவீந்திரநாதன், தமிழாசிரியர் அ. லிங்கராஜ் ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசன் சிறப்புரையாற்றினார். (10)



# கட்டாக்காலி மாடுகள் பொதுமக்களிடம் கையளிப்பு

(தொல்புரம்)

அரியாலையில் நாவலடி மற்றும் பூம்புகார்ப்பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளில் பிடிக்கப்பட்ட முப்பது மாடுகள் அப்பகுதிப் பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கடந்த கால யுத்த அனர்த்தத்தின்போது பதினைந்து வருடங்களுக்கு முன்னர் பூம்புகார் மற்றும் நாவலடிப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறியிருந்தனர். இதன்போது பொதுமக்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் அப்பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரிந்து பெருகிவிட்டன.

தற்போது மீண்டும் பொதுமக்கள் மீள் குடியேறிய நிலையில் அவை குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வந்தன. இவ் விடயம் குறித்து அப்பகுதி மக்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அமைச்சரின் பணிப்பின்படி, கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு இரண்டு மாடுகள் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளில் 30 மாடுகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. நல்லூர் தொகுதி அமைப்பாளர் அ.இரவீந்திரதாசன், கால் நடை வைத்திய அதிகாரிகள், நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு பிடிக்கப்பட்ட மாடுகளைக் கையளித்தனர். (26)

# வழங்கப்படுகிறது சமுர்த்தி நிவாரணம்

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பல நோ.கூட்டுறவுச்சங்க கிளைகளில் மார்ச் ஏப்ரல் மாதங்களுக்குரிய சமுர்த்தி நிவாரண, உலர் உணவுப் பொருட்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இந்நிவாரணத்தை மக்கள் காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளுமாறு சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (104)

# தோட்டக் காணிகளில் சட்டவிரோத மண் அகழ்வு

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் வயல் நிலங்கள் மற்றும் தோட்டக் காணிகளில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வுகள் இடம்பெற்றுவருவதால் மேற்படி மண் அகழப்படும் நிலங்களின் சொந்தக் காரர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் அனுமதியின்றி களவாக மண் அகழ்ந்து வேறு இடங்களுக்கு இரவு வேளைகளில் கொண்டு செல்லப்படுவதனால் விளைநிலங்கள் பாதிக்கப்படுவதாகவும், இதனால் அங்கு பயிற்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதிருப்பதாக தெரிவிக்கும் விவசாயிகள் இதனைத் தடுக்க உரிய அதிகாரிகள் முன்வரவேண்டும். என்றும் தமது ஆதங்கத்தினை மிகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (03)

# மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள்

**- அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை**

(தொல்புரம்)

வலிவடக்கில் அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் கிணறுகளை இறைத்துத்துப்பரவு செய்வதற்கு மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 20 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இருப்பதாக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ். முரளிதரன் தெரிவித்தார்.

மீள்எழுச்சித்திட்டத்தில் வழங்கப்பட்ட இந்த நீர் இறைக்கும் இயந்திரக்களை ஒவ்வொரு கிராம சேவையாளர்பிரிவுக்கும் தலா இரண்டு வீதம் வழங்கப்படவிருப்பதாகவும் இதன் மூலம் மக்கள் தங்களது கிணறுகளை இறைத்துத் துப்பரவு செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீள்எழுச்சித் திட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதை அடுத்தே இந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் மீள் எழுச்சித்திட்டத்தினால் வழங்கப்பட்டது எனவும், மேலும் பல உதவிகளை அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விருது வழங்கிக் கௌரவிக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

2010ஆம் ஆண்டில் வன்னி மாவட்டத்தின் மன்னார் மடு, வவுனியா வடக்கு, வவுனியா, தெற்கு, முல்லைதீவு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களுக்கு உட்பட்ட மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 3ஏ.க்கும் அதிகமான பெறுபேறுகளினைப்பெற்று சித்தியடைந்த மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்க றிஷாட் பதியூதீன் நிதியம் தீர்மானித்துள்ளது.

இம் மாணவர்களின் விபரங்களினை ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 10 மாணவர்களின் விபரங்களினை முன்னுரிமை அடிப்படையில் றிஷாட் பதியூதீன் நிதியத்துக்கு சம்பந்தப்பட்ட வலயங்களின் பாடசாலை அதிபர்களினை அனுப்பி வைக்குமாறு இவ் நிதியத்தின் இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (42)

# இடமாற்றம் இடைநிறுத்தம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களில் கணவன் அல்லது மனைவி ஆயோரில் ஒருவர் தற்சமயம் பிற மாவட்டம் ஒன்றில் கடமையில் இருப்பின் அவர்களது இடமாற்றங்கள் தொடர்பாக பரீசீலனை செய்து அவர்களது இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிரியர்களது குடும்பங்களினதும் மற்றும் அவர்களது பிள்ளைகளினதும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான முறையில் அவர்களது இடமாற்றங்கள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (03)

# அரச ஊழியருக்கு இலவச காணி

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணிபுரியும் அரச ஊழியருக்கு இலவச காணி வழங்கப்படவுள்ளது. இதற்கான விபரங்கள் அரச திணைக்களங்களிடமிருந்து கோரி விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இவ்வாறு இலவச காணி வழங்குவதற்கான கூட்டம் ஒன்று ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவினை சொந்த வசிப்பிடமாக கொண்டவர்களாகவும், இம் மாவட்டத்தில் அரச திணைக்களத்தில் பணி புரிபவராகவும் சம்பந்தப்பட்டவர் பெயரில் வேறு எதுவித காணியும் இல்லாத அரச ஊழியர்களுக்கே இத்தகைய இலவச காணி வழங்கப்படவுள்ளது. (42)


# ஆக்கங்கள் கோரல்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவு கலாச்சாரப் பேரவையினால் யூன் மாத இறுதி வாரத்தில் கலை இலக்கிய விழாவும், பூஞ்சுடர் என்னும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறவுள்ளதாகவும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் பூநகரி பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதற்கான ஆக்கங்கள் பூநகரிப்பகுதியை சொந்த வதிவிடமாகக்கொண்ட படைப்பாளிகளிடம் இருந்து கோரப்பட்டுள்ளது.

சிறுகதை கட்டுரை கவிதை நாட்டார்பாடல்கள், குட்டி நாடகங்கள் என்பன எதிர்பார்க்கப்படுகிறது. (112)



**தேசிய வீடமைப்பு அதிகாரசபை மண்டபத்தில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை ஊழியர்களும், மாணவர்களும் நேற்று யாழ். போதனாவைத்தியசாலை வைத்தியகலாநிதி ரீ.கலைச்செல்வி தலைமையிலான குழுவினரிடம் இரத்ததானம் வழங்குவதை காணலாம்.** (பா)

# இழுவைப்படகு தொழிலாளர்கள் பெற்ற கடனை செலுத்தவில்லையென விசனம்

(யாழ்ப்பாணம்)

துரித அபிவிருத்தி மீன் எழுச்சித் திட்டத்தின் கீழ் இழுவைப் படகு தொழிலாளர்களுக்கு மாற்று தொழிலுக்கான உபகரணம் கொள்வனவு செய்வதற்கு வழங்கிய கடன் மீள செலுத்தப்படவில்லை என வடமாகாண கடல் தொழிலாளர் சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இழுவைப்படகு தொழில் தடைசெய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று தொழிலுக்கான கடன் வழங்கப்படவில்லை என மீனவர்கள் புகார் தெரிவித்தனர் தொடர்பாகக் கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தனர்.

2004ஆம் ஆண்டு மார்கழிமாதம் தொழில் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு குறித்த சமாசங்கள் ஊடாக கடன் வழங்கப்பட்டது. வட்டியின்றி இத்தொகையை பகுதியாக சமாசத்திற்கு மீள செலுத்துமாறு நிபந்தனை வழங்கப்பட்டது.

ஆனால் எந்த ஒருவராலும் கடன் மீளவும் செலுத்தவில்லை இதனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட 99இலச்சத்து 40 ஆயிரம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

இவர்கள் இதனை மீள செலுத்தியிருந்தால் அந்த பணத்தை சுழற்சி முறையில் வேறு பயனானிகளுக்கு வழங்கியிருக்க முடியும். இதனால் பலர் நன்மை அடைந்திருப்பார்கள்.

வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட 45 தொழிலாளர்களுக்கு 55 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வலிகாமம் வடக்கு கடல் தொழிலாளர் சமாசத்தை சேர்ந்த 2 தொழிலாளர்களக்கு 3 இலச்சத்து 80 ஆயிரம் ரூபாவும், தீவகம் வடக்கு கடல் தொழிலாளர் சமாசத்தை சேர்ந்த 3 தொழிலாளர்களுக்கு 5 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் தீவகம் தெற்கு கட்ல் தொழிலாளர் சமாசத்தை சேர்ந்த 2 தொழிலாளர்களுக்கு 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் யாழ்ப்பாணபட்டின சமாசத்தைசேந்த 34 தொழிலாளர்களக்கு 30 இலச்சத்து 60 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது. றான் அமைப்பின் நிதி அரச அதிபர் ஊடாக வழங்கப்பட்டது. (கா)

# விண்ணப்பம் கோரல்

(யாழ். நிருபர்)

இலங்கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் மோட்டார் சைக்கிள் திருத்துதல் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் எதிர்வரும் ஜூன்மாதம் 4ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை, வலந்தலைச் சந்தி, காரைநகர் என்னும் முகவரிக்கு தங்களது சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்குமாறு இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் இரா. அகிலன் தெரிவித்துள்ளார். (10)

# யாழ். திணைக்களங்களில் 569 பதவி வெற்றிடங்கள்



யாழ்ப்பாணத்தில் அரசாங்க சேவையில் 569 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்கள் பல்வேறு மட்டங்களில் காணப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கிராம சேவையாளர்கள் 114, எழுது வினைஞர்கள், 225, எழுதுவினைஞர்கள், (சுப்ரா) 12, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் 16, அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் 4, மொழிபெயர்ப்பாளர்கள், 23 அலுவலக உதவியாளர்கள் 128, வாகன சாரதிகள் 11, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் 18, பொறியியலாளர்கள் 11, எஸ்.எல்.ஏ.எஸ் பதவிநிலை உத்தியோகத்தர்கள் 7 ஆகிய வெற்றிடங்கள் தற்போது நிலவுகின்றன. யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களங்களிலும் காணப்படும் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவெனவும் அரசாங்க அதிபர் கூறினார்.

# விசேட போக்குவரத்து ஏற்பாடு

(யாழ். நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் சிவன்கோவிலில் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக காரைநகர் இ.போ.ச. சாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து அதிகாலை 5 மணிமுதல் ஆலயத்துக்கு நேரடி பஸ்சேவை இடம்பெறவுள்ளது. தனியார் பேருந்துகளும் அதிகாலை முதல் ஆலயத்திற்கு நேரடியாக சேவையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# சம்புத்தத்வ ஐயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள்

(பருத்தித்துறை)

2600ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு வடமராட்சி வலயமட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு.

**பேச்சு**

உ.சங்கீதா (வட இந்து மகளிர் கல்லூரி), த.சிந்துஜா (விக்னேஸ்வரக் கல்லூரி), மு. சத்தியதேவி ( புற்றளை மகா வித்தியாலயம்), கி. தர்ஷிகா வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), தி.சரூபி ( வட இந்து மகளிர் கல்லூரி)

**கட்டுரை**

மி. விவோகானந்தன், வி. ஜானுஷா, கௌ.செந்தில்நேசன் (வட இந்து மகளிர் கல்லூரி), ம.நிர்த்திகா (வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), உஷாந்தி மகாலிங்கம் (விக்னேஸ்வரக் கல்லூரி)

**பக்தி கீதம் (குழுப்பாடல்)**

விக்னேஸ்வரக் கல்லூரி, (வட இந்து மகளிர் கல்லூரி. (19)

# மீள்குடியேற்றம்

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் நலன்புரி முகாமில் இருந்த ஒருதொகுதி மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். 26குடும்பங்களைச் சேர்ந்த 66பேரே இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் முல்லைத் தீவு, தண்ணீர்ஊற்று கிழக்குப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் பத்திநாதன் கூறியுள்ளார். இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு ஒருவாரத்திற்குத் தேவையான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் நிவாரணப் பொருட்கள், உதவித் தொகைகள் என்பவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘சட்டி சுட்டதடா கைவிட்டதடா’ இந்த நிலைமைதான் எங்கட ஆக்களுக்கு! நானென்ன சொல்ல வாறனெண்டா, இந்த யாழ்ப்பாண பிரதேசத்தில ஒருபகுதி.

மிகவும் நெருக்கடியான குடியிருப்புகளைக் கொண்ட பகுதி. அந்த இடத்துக்கு வேலை செய்யப் போறேண்டா எங்கட மாநகர சுகாதார ஊழியர்கள் விரும்புறேல்ல: மாட்டேனெண்டிடுவாங்க!

பின்ன என்ன அந்தப் பகுதி வடிகால்கள் பல வாரமாகக் கழுவுப் படாமல் கிடக்கும். வீதிகள் கூட்டுப்படாமல் இருக்கும்.

இப்பிடி இருந்தா அந்த இடத்தின் சீத்துவக் கேட்டைச் சொல்லவும் வேணுமா? எண்டாலும் சொல்றன், சொன்னாத் தான எல்லாருக்கும் பிரச்சனை விளங்கும்!

சுகாதாரப் பகுதி ஊழியர்கள் இந்தப் பகுதிக்கு வந்து வடிகால்களை துப்பரவு செய்யு வெளிக்கிட்டால் போதும், வீட்டுக்கு வீடு வாசல்களில் பெண்டுகள் பிரசன்னமாகி விடுவினம்.

இந்தப் பிரசன்னம் எதுக்கெண்டு நினைக்கிறியள்? அந்த ஊழியர்களுடன் சேர்ந்து அப்பகுதியை சீர் செய்யிறதுக் கெண்டே; அதுதானில்லை!

ஊழியர் வடிகாலில் தள்ளிவரும் மணல், குப்பை கூழங்களை அள்ளி வெளியில் வைக்கக்கூடாதென மறிக்கத்தான்.

அப்படி மறிச்சா அவனென்ன மடியிலையே அதைக் க்ட்டிக் கொண்டு போறது!

அள்ளி வைக்கிற இடமோ அவையவேன்ர வீட்டு வளவுகளுமில்லை; அரசுக்கு சொந்தமான மாநகர நிர்வாகத்துக்குட்பட்ட வீதியோரம்.

இதனைால் தான் அந்தப் பகுதிக்கு துப்புரவு வேலைக்குப் போறதுக்கு சுகாதார ஊழியர்கள் பின்னடிக்கினம்!



இதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுறது மட்டுமா நடக்கும்? நுளம்பு, நோயக்கிருமிகள் பெருகி நெருக்கடியான அந்தப் பகுதியில் தொற்றுநோய்கள் விரைவாய்ப் பரவ வாய்ப்பாய்ப் போகுமெண்டுறதைச் சனம் நினைக்கிறேல்ல. வெளியில் அள்ளிவைச்சால் துப்பரவில்லை, அந்த இடம் கேவலமாகுதெண்டு தான் நினைக்குதுகள்.

நகரசபை அந்த அழுக்குகளை சின்ன தள்ளுவண்டில் வழங்கி அப்புறப்படுத்தவேணும் அதுக்கும் எங்க மாநகர சபையிட்ட வருமானமே வருகுது? இதனால மாநகர சபை சுகாதார ஊழியர் ‘சட்டி சுட்டதடா கை விட்டதடா” எண்டு கை விட்டு விடுவினம் அதனால வாறத எல்லாம் அனுபவிக்கிறது நாங்க தான். இனியாவது இந்தச் சனங்கள் வடிகால் ஊத்தைகளை வெளியில் அள்ளி வைக்க விடுங்களா என்ன?

# இரட்டை வாயில் கோபுர கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு அருள்மிகு காட்டுமலைக்கந்த சுவாமி கோயில் திரிதள இருட்டைவாயில் இராஜகோபுர மகா கும்பாபிசேக நிகழ்வுகள் யூன் மாதம் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆலய பிரதமகுரு சிவ. சிவசுப்பிரமணிய குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை கும்பாபிசேக தினத்தன்று ஆலய வரலாறு தொடர்பானதும், ஆன்மீகம் சார்ந்ததுமான விடயங்களை உள்ளடக்கிய கும்பாபிசேக நூல் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

குடாநாட்டில் உள்ள புகழ் பெற்ற முருகன் ஆலயங்களின் வரிசையிலே இரட்டை வாயில் இராஜ கோபுரத்தை கொண்டமைந்த ஆலயம் என்ற பெருமையினை இவ் ஆலயம் பெறுவதும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். (03)

# நாளை மணிவிழா

(அச்சுவேலி)

யா.நடராஜராமலிங்க வித்தியால முன்னான் பிரதி அதிபரும் சமூக சேவையாளருமாகிய சபா. குகதாசனின் மணிவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு ஊரெழு கணேசா வித்திய சாலை அதிபர் திரு. சி. திரிரேன் தலைமையில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாணக கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் வே. தி. செல்வரட்ணம் யாழ். வலய கல்வி வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் அ. இராஜேந்திரன், யாழ். பல்கலைக் கழக கணக்கியல்துறை வணிக முகாமைத்துவ பீடத்தலைவர் பேராசிரியர் தி. வேல்நம்பி, கல்வியில் துறை பேராசிரியர் கலாநிதி த. கலாமணி ஆகியோர் கலந்துகொண்டுசிறப்புரை ஆற்றவுள்ளனர். (03)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

[27.05.2011 – வெள்ளிக்கிழமை]

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்
வைகாசி 13 ஆம் நாள்.
இராகுகாலம் 10.22–11.52, சுபநேரம் 5.52 –7.22,
நட்சத்திரம் உத்தரட்டாதி பி.இ 5.21 வரை
திதி: தசமி மு.இரவு 7.50 வரை
சித்தாமிர்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணம் வரவு, தேக ஆரொக்கியம் நண்பர்வருகை, வீண் அலைச்சல், கவலை.

ரிஷபம்:– கௌரவக்குறைவு, பணக்கஷ்டம், மனக்கவலை வீண் விரயம், விபத்தும் வரும்.

மிதுனம் :– பணம் வரும், நண்பர்தொல்லை, வீண் அலைச்சல், மதிப்பு உயரும்.

கடகம்:– திருடர்பயம், பணம் வரும் வீட்டில் குழப்பம், தேக சுகம், கவலை.

சிம்மம்:– பணக் கஷ்டம், மனச்சஞ்சலம், குடும்பத்தில் கலகம், கவலை, தேக சுகம் குறைவு.

கன்னி :– நண்பர்வருகை, பணம் வரும், திருடர் பயம், மனக்கவலை, வழியில் களவு.

துலாம் :– பணக் கஷடம், விபத்தும் வரலாம், களவு போகும் கவனம், மனச் சஞ்சலம், கவலை.

விருச்சிகம்:– பணம் வரும், தேகரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, மன நிம்மதி, விபத்துக்கு இடமுண்டு.

தனுசு:– நண்பர் தொல்லை, பணக் கஷ்டம், மனச்சஞ்சலம், திருடர் பயம், கவலை.

மகரம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம்வரும், மன நிம்மதி மூத்தோர் ஆசி.

கும்பம் :– மன நிம்மதி, பணக்கஷ்டம், வீண் அலைச்சல், களவும் நடக்கலாம்.

மீனம்:– வீட்டில் கலகம், பணம் வரவு, மன உளைச்சல், கவலை, நிம்மதிக்குறைவு.

# இந்திய அணிக்கு எதிராக சிறப்பாக விளையாடுவோம்



டெரன் சமி

(செயின்ட் நீட்ஸ்)

இந்திய அணியுடனான தொடரில் சிறப்பாக விளையாடி வெற்றி பெறுவோம் என்று மேற்கிந்தியத் தீவு அணியின் கப்டன் டரன் சம்மி கூறினார்.

பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் தொடரில் 1:1 என்ற கணக்கில் சமன் செய்த மேற்கிந்தியத் தீவு அணி அடுத்து இந்திய அணி யுடனான ரி-20 ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் மோதவுள்ளது. ரி-20 போட்டி ஜூன் 4ஆம் திகதி டிரினிடாடில் நடக்கிறது. இந்தத் தொடரில வெற்றி வாய்ப்புக் குறித்து மேற்கிந்தியத்தீவு அணியின் கட்டன் சமி கூறியதாவது-

பாகிஸ்தான் அணியுடன் நடந்த டெஸ்ட் தொடரை சமன் செய்தது மகிழ்ச்சி அளிகிறது. கடினமாகப் பயிற்சியளித்ததுடன், களத்தில் அதைச் சரியாக செயற்படுத்தியதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.


அடுத்து இந்திய அணியுடன் மோதவுள்ளளோம். மிக முக்கியமான அந்தத் தொடர் எங்களுக்குப் பெரிய சாவாலாக இருக்கும். இளம் வீரர்கள் அடங்கிய எங்கள் அணி, கடுமையாகப் போராடும். சிறப்பாக விளையாடி வெற்றிகளைக் குவிப்போம் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

## நிலத்தை ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவு

(புதுடில்லி)

கிரிக்கெட் வீரர் கங்குலிக்கு கடந்த 2000ஆம் ஆண்டு மேற்குவங்க அரசு பரிசாக நிலம் வழங்கியது. இந்த நிலம் விதிமுறைகளை மீறி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறி உயர்நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், விதிமுறை மீறல் நடந்திருப்பதாகக் கூறி, நிலத்தை அரசிடம் 2 வாரங்களுக்குள் வழங்குமாறு கங்குலிக்கு உத்தரவிட்டுள்ளது.

## கிரிக்கெட் வீரர் மரணம்



அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கட் வீரர் டெரி ஜென்னர் உடல் நலக்குறைவால் நேற்றுமுன்தினம் காலமானார்.

1970 களில் மொத்தம் 9 டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். அப்போது, அவுஸ்திரேலிய அணியின் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

ஷேன் வோர்ன் உட்பட அவுஸ்திரேலியாவின் பல முக்கிய பந்துவீச்சாளர்களுக்கு டெரி ஜென்னர் பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

டெரி நீண்ட காலமாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், ஒன்றரை மாதத்துக்கு முன்பு மாரடைப்பு ஏற்பட்டதாகவும் அவரது மனைவி ஆன் கூறியுள்ளார்.

## இறுதிவரை ஆட்டமிழக்கக் கூடாதென்ற எனது எதிர்பார்ப்பு நிறைவேறியது



ரெய்னா

பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெறும் வரை களத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். நினைத்தது போலவே கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தது மகிழ்ச்சியளிப்பதாக ரெய்னா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது:

வெற்றிபெறும் வரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருப்பது முக்கியமானது என்பது தெரியும். சகீர்கான் சிறப்பாக பந்துவீசினார். நான் எனது இயல்பான ஷாட்களை ஆடினேன். நம்பிக்கையை இழக்காமல் எனது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது முக்கியமானது. அணிக்காக வெற்றி தேடித்தர வேண்டும் என விரும்பினேன்.

முக்கியமான கட்டத்தில் பத்ரிநாத், டோனி ஆகியோர் சிறப்பாக ஆடினர். பத்ரிநாத் மற்றும் டோனியுடனான இணைப்பாட்டம் மிக முக்கியமானது. பத்ரிநாத் அற்புதமாக ஆடினார். டோனி வழக்கம்போல் தனது ஷாட்களை விளாசினார் என்றார்.

சென்னை அணியின் சிறப்பான ஆட்டம் இறுதி ஆட்டத்திலும் தொடரும் என்று நம்பிக்கைத் தெரிவித்த ரெய்னா, கடந்த 4 ஆண்டுகளாகவே நாங்கள் சிறப்பாக ஆடி வருகிறோம். கப்டன் டோனி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். இறுதி ஆட்டத்தில் திட்டமிட்டு அதைச் செயற்படுத்துவது முக்கியமானது எனத் தெரிவித்தார்.

## டெஸ்ட் அணியிலும் இடம் பிடிக்க வேண்டும்

### என்கிறார் விராட்ஹோலி

(மும்பை)

இந்திய டெஸ்ட் அணியில் விளையாடுவதே தனது இலட்சியமெனத் தெரிவித்துள்ளார் இந்திய ஒருநாள் அணியின் இளம் துடுப்பாட்ட வீரரான விராட் ஹோலி.

சென்னை அணியுடனான போட்டியையடுத்து அவர் மேலும் கூறியதாவது-

சென்னைக்கு எதிரான பிளே ஒவ் சுற்றில் சிறப்பாக ஆடியும் தோற்றது ஏமாற்றமளிக்கிறது.

எங்களின் முழுக்கவனமும் இனி அடுத்த ஆட்டத்தின் மீதுதான். கடைசி 4 ஓவர்களில் எங்களின் பந்துவீச்சு மோசமாக அமைந்தது என நினைக்கிறேன். நாங்கள் சிறப்பான பந்துவீச்சாளர்களைப் பெற்றிருந்த போதிலும், இந்த ஆட்டத்தில் சிறப்பாக பந்துவீச முடியாமல் போய்விட்டது. எல்லா நேரங்களிலும் சிறப்பாக பந்துவீச முடியாது.

எப்போதும் பொறுப்போடு விளையாட முயற்சிக்கிறேன். அதுவே எனக்கு பக்குவத்தை தந்துள்ளது. சிறிய அளவில் நம்முடைய பங்களிப்பு இருக்க வேண்டும் என்று நினைப்பதை விட நாட்டுக்காக விளையாடி வெற்றிபெற வேணடும் என்று நினைக்கும்போது நம்முடைய சிந்தனை பெரிய அளவில் மாற்றம்பெறுகிறது.

உலகக் கோப்பை உள்பட பல் வேறு போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருவதால் ஓய்வு தேவை என்று நினைக்கவில்லை. நிறைய கிரிக்கெட் போட்டிகளில் விளையாட இதுசரியான நேரம் என்று நினைக்கிறேன். தொடர்ந்து விளையாடினால் ஒரு கட்டத்தில் ஓய்வு தேவை என்று கருதுவோம். இந்திய அணி அதிக ஆட்டங்களில் விளையாடுகிறது. இதனால் மூத்த வீரர்களுக்கு ஓய்வு கொடுபபதில் தவறு கிடையாது என்றார்.

உலகக் கோப்பை குறித்துப் பேசிய கோலி, வங்கதேசத்துக்கு எதிரான முதல் ஆட்டத்தில் சதமடித்தது எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது. அது மிகச்சிறப்பான ஒன்று. அது உலகக் கோப்பை முழுவதும் சிறப்பான பங்களிப்பை அளிப்பதற்கு உதவியது. நீண்ட நாள்கள் இந்திய அணிக்காக விளையாட வேண்டும். இந்திய டெஸ்ட் அணியில் விளையாடுவதே எனது லட்சியம் என்றார்.

## ஐ.பி.எல்.போட்டித் தொடரில் மதிப்பு மிக்க வீரர்கள்



ஐ.பி.எல். போட்டியில் அதிக மதிப்புமிக்க வீரர்கள் விவரம் வெளியாகி உள்ளது. இதன்படி கிறிஸ்கெய்ல் இந்தப் போட்டித் தொடரில் சிறந்த அதிரடி வீரராக உள்ளார்.

விலை மதிப்புமிக்க வீரர்கள் பட்டியலில் கிறிஸ் கெய்ல் (பெங்களூர்) முதலிடத்தில் உள்ளார். ஜனவரி மாதம் நடந்த ஏலத்தில் அவர் விலை போகவில்லை. இடையில் பெங்களூர் அணி அவரை மாற்று வீரராக ஒப்பந்தம் செய்தது.

அதற்கு அடுத்த நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் கப்டன் டோனி, சங்ககரா (டெக்கான்) உள்ளனர். மலிங்க (மும்பை), ஷேவாக் (டில்லி), யூசுப்பதான் (கொல்கத்தா), வாட்சன் (ராஜஸ்தான்), வல்தாட்டி (பஞ்சாப்), போத்தா (ராஜஸ்தான்), ஷான் மார்ஷ் (பஞ்சாப்) ஆகியோர் முறையே அதற்கு அடுத்த நிலையில் உள்ளனர்.

# பாகிஸ்தானில் விளையாடுவதற்கு இலங்கை அணித் தலைவர் மறுப்பு



(கொழும்பு)

மீண்டும் ஒருமுறை பாகிஸ்தானில் சென்று விளையாடமாட்டேன் என இலங்கை அணித் தலைவர் திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இலங்கை அணி வீரர்கள் செனபஸ் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டது. அதன்போது 8 பேர் உயிரிழந்ததுடன் சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட 7 பேர் காயமடைந்தனர்.

மீண்டும் பாகிஸ்தான் தொடரில் பங்கேற்க செல்வீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு தான் அதை பற்றி எதுவும் எண்ணவில்லை எனவும், எதிர்காலத்திலும் கடந்தகால தாக்குதல் அனுபவங்களை பெற விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

தன் தனிபட்ட அடிப்படையில் தான் அங்கு விளையாட செல்லமாட்டேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - இங்கிலாந்து முதல் டெஸ்ட் ஆரம்பம்

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டி நேற்று சோபியா கார்டன் மைதானத்தில் ஆரம்பமானது.

மழையால் தாமதமாகத் தொடங்கிய இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை அணி.

48 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பரணவிதானவும் டில்ஷானும் ஆரம்ப விக்கெட்டுக்காக 93 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். டில்ஷான் 50, சங்ககார 11 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பரணவிதான 58, ஜெயவர்த்தன 4 ஓட்டங்களைப் பெற்று தொடர்ந்து ஆடிக்கொண்டிருந்தனர். இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாளாகும்.

# ஆர்ஜென்ரீன வீரர்கள் ஊக்கமருந்து பாவித்தனர்

(லண்டன்)

கடந்த 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்ட தகுதிகாண் போட்டியின்போது தமது அணி வீரர்கள் ஊக்க மருந்து பாவித்ததாக ஆர்ஜென்ரீன அணியின் முனனாள் நட்சத்திர வீரர் மரடோனா தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துளளதாவது-

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முக்கியமான போட்டியின் போது எங்களுக்கு வழங்கப்பட்ட தேனீரில் பெயர் தெரியாத பவுடரைக் கலந்து கொடுத்தார்களா. அதைக் குடித்தவுடன் நாம் அனைவரும் உற்சாகமாக விளையாடினோம் எனத் தெரிவித்துள்ளாா.

ஆர்ஜென்ரீன வீரர்கள் ஊக்க மருந்து பயன்படுத்தியதாகத் தெரிவித்துள்ளமை தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நடுவர்கள் தரமுயர்வு

(டுபாய்)

2011, 2012 காலப்பகுதியில் செயற்படும் இரண்டு நடுவர்களை ஐ.சி.சி. தரம் உயர்த்தியுள்ளது. இலங்கையின் குமார் தர்மசேன, இங்கிலாந்தின் கெட்டில்பரோ இருவருமே தரம் உயர்த்தப்பட்ட நடுவர்களாவர்.

ஒப்பந்தம் முடிவடையும் தறுவாயிலிருக்கும் அவுஸ்ரேலியாவின் டரில் ஹார்ப்பர் மற்றும் சர்ச்சைக்குரியவரான அசோக டீ சில்வா இருவரின் இடங்களுக்குக்குமே, மேற்படி இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தர உயர்வு குறித்து கருத்துத் தெரிவித்த குமார் தர்மசேன, இந்தத் தர உயர்விற்கு நியாயம் சேர்க்கும் வகையில் கடுமையாக உழைப்பதும் சரியான துல்லியமான முடிவுகளை எடுப்பதுமாக இருக்குமெனத் தெரிவித்தார்.

தரமுயர்த்தப்பட்ட நடுவர் விபரம் வருமாறு-

பிலிபோடன், அலீம்தார், ஸ்ரீவ்டேவிஸ், குமார்தர்மசேன, பில்லி டொக்ரோவ், மராயஸ் எறாஸ்மஸ், இயன்கோல்ட், ரோணிஹில், றிச்சட் கெட்டில்பரோ, அசாத் ரவூப், சைமன் ரோபல், ரொட்ரக்கி.

# ஹஷான் திலகரட்னவை தொடர்புகொள்ள முடியவில்லை

(கொழும்பு)

ஆட்ட நிர்ணய சதி தொடர்பில் மேல்மாகாண சபை உறுப்பினர் ஹஷான் திலகரட்னவிடம் இருந்து தகவல்களைப் பெறுமாறு சர்வதேச கிரிக்கெட் சபை வலியுறுத்திய போதும் ஹஷான் திலகரட்னவை தொடர்பு கொள்ள முடியாதுள்ளது என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை ரெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ஹஷான் திலகரட்ன புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

# துணுக்காய் கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள்

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய் கல்விக் கோட்டங்களுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு இடையிலான வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளிலும் ஜூன் மாதம் முதலாம் திகதியும், மல்லாவி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கல்வி வலய உடற்கல்வி ஆலோசகர் ந.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டியானது கடந்த 20 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியினை தொடர்ந்து ஜூன் மாத முதலாம் வார இறுதியில் முல்லைத்தீவு மாவட்டமட்ட மெய்வன்மைப் போட்டியும், மல்லாவி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (42, 10)

# பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றில் வோஸ்னியாக்கி, பெடரர்

பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாடிய முதல்தர வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) தகுதி பெற்றார். இரண்டாவது சுற்றில் அலெக்சாண்ட்ரா வோஸ்னியாக்குடன் (கனடா) நேற்று முன்தினம் மோதிய வோஸ்னியாக்கி 6:3 என்ற கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றினார். அடுத்த செட்டில் அலெகசாண்ட்ரா கடுமையாகப் போராடியதால் ஆட்டம் டைபிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது.

இறுதியாக கரோலின் வோஸ்னியாக்கி 6:3, 7:6 (8:6) என்ற செட் கணக்கில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு 2ஆவது சுற்றுப்போட்டியில் ஆஸ்திரியாவின் சமந்தா ஸ்டோசர் 6:0, 6:2 என்ற நேர் செடகளில் சிமோனியா (ரோமானியா) எளிதாக வீழ்த்தினார். ஜூலியா (ஜெர்மனி) ரோடினோவா (அவுஸ்ரேலியா), கிசெலா டுல்கா (ஆர்ஜெனரீனா) ஆகியோரும் 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் முன்னணி வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) 6:3, 6:0, 6:2 என்ற நேர் செட்களில் மேக்சைம் டெய்க்குரியாவை (பிரான்ஸ்) வீழ்த்தினார். மற்றொரு 2 ஆவது சுற்றுப் போட்டியில் ஜன்கோ திப்சாஜெரிக் (செர்பியா) 6:1, 6:3, 6: 0 என்ற நேர் செட்களில் பெரேரியாவை (ஸ்பெயின்) எளிதாக வென்றார்.

# தீவக வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

தீவக வலய பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரத்தின் தொடர்ச்சி வருமாறு-

**800 மீற்றர் ஓட்டம்**

என்.ஜெனற்ராஜன் (நெடுந்தீவு ம.வி), ஏ.அருள்ராஜ் (சென். அன்ரனீஸ் கல்லூரி), ஜி.பகீரதன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**1500 மீற்றர் ஓட்டம்**

என்.ஜெனற்ராஜன் (நெடுந்தீவு மகா வித்தியாலயம்), ஏ.அருள்ராஜ் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஜி.பகீரதன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி).

**5000 மீற்றர் ஓட்டம்**

ஜி.பகீரதன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ரி.சுலக்சன் (சென். அன்ரனீஸ் கல்லூரி).

**4x100 மீற்றர் அஞ்சலோட்டம்**

சென்.அன்ரனீஸ் கல்லூரி, நெடுந்தீவு ம.வி, வேலணை மத்திய கல்லூரி.

**4x400 மீற்றர் அஞ்சலோட்டம**

சென்.அன்ரனீஸ் கல்லூரி, யாழ்ற்றன் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

ஏ.டொமிங்கோ (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஏ.அன்ரன் அமலதாஸ் (நெடுந்தீவு ம.வி), ஏ.அருள் கோபில்ராஜ் (சென். அன்ரனீஸ் கல்லூரி),

**உயரம் பாய்தல்**

ரி.சசிதரன் (வேலணை மத்திய கல்லூரி), ரி.சுலக்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), பி.சசிதரன் (டாக்டர் ஏ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்).

**முப்பாய்ச்சல்**

ஏ.டொமிங்கோ (சென்.அன்ரனீஸ் கல்லூரி), எ.அருள்கபில்ராஜ (சென் அன்ரனீஸ் கல்லூரி), கிறிஸ்ரி அஜந்தன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்).

**குண்டெறிதல்**

ஏ.யூட்பிறின்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஜே.கனிஸ்ரன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), ஏ.எட்வின் உதயராஜ் (நெடுந்தீவு ம.வி).

**தட்டெறிதல்**

ஏ.யூட்பிறின்சன் (சென்.அன்ரனீஸ் கல்லூரி), கே.முகுந்தகுமார் (வேலணை மத்திய கல்லூரி), ஜே.சஞ்சீவன் (நெடுந்தீவு ம.வி,

**ஈட்டி எறிதல்**

ஏ.எட்வின் உதயராஜ் (நெடுந்தவு ம.வி), ஏ.யூட்பிறின்சன் (சென். அன்ரனீஸ் கல்லூரி), ரி.கண்ணதாசன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்.

**11 வயதுக்குபட்ட பெண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்**

ரி.நதுஷா (மண்டைதீவு ம.வி), ஜே.ஜெனிற்றா (எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்), எம். கயல்விழி (யாழ்ற்றன் கல்லூரி).

**100 மீற்றர் ஓட்டம்**

ஜே.ஜெனிற்றா (எழுவைதீவு முருகவேல் வித்தி), ரி.நதுஷா (மண்டைதீவு மகா வித்தியாலயம்), வி.லவிந்தா- (காரைநகர் சுந்தரமூர்த்தி நாயானார் வித்தி).

**நீளம் பாய்தல்**

ஜே.ஜெனிற்றா (எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்), கே.தனுசிகா (எழுவைதீவு முருகவேல் வித்தியாலயம்), எஸ். சரணியா (காரைநகர், ஊரி ஏ.ரி. எம்.வித்தியாலயம்).

**உயரம் பாய்தல்**


ஏ.சுவிதா (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்), பி.அனுசியா (நெடுந்தீவு மகா வித்தியாலயம்), வி.ஜென்சி (வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்).

**4x400 மீற்றர் அஞ்சலோட்டம**

சென்.மேரிஸ் கத்தோலிக்க மகளிர் வித்தியாலயம், யாழ்ற்றன் கல்லூரி, டாக்டர் ஏ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம். (தொடரும்.........)



யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான மெய்வன்மைப் போட்டி துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றது. இதில் ஈட்டி எறிதல், குண்டெறிதல், தடியூன்றிப் பாய்தல், தடை தாண்டியோட்டம் ஆகிய விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்கள் தமது திறமையை வெளிக்காட்டுவதைக் காணலாம். (படங்கள் : தமிழ்வாணன்)

தேசிய கல்விக் கல்லூரிகளில் பயின்ற 2524 பேருக்கு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதி ஆசிரிய நியமனம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# இந்தியாவின் விருப்பங்களுக்கு மாறாக நடந்தால் இலங்கையில் மீண்டும் குழப்பநிலை ஏற்படும்

## அரசை எச்சரிக்கிறார் பேராசிரியர் றொகான் குணரட்ன

(கொழும்பு)

**இந்தியாவின் பூகோள ்மூலோபாய விருப்பங்களுக்கு முரணாக இலங்கை செயற்படுமானால், இந்தியா மீண்டும் ஒரு குழப்பநிலையை இலங்கையில் உருவாக்கும். இலங்கையை மீண்டும் ஒருமுறை தண்டிக்கவும் அது தயங்காது என்று எச்சரித்துள்ளார் சிங்கப்பூர் நயங்யாங் பல்கலைக்கழக பேராசிரியர் றொகான் குணரட்ண.**



கொழும்பில் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் Shippers' Academy நடத்திய கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

2009இல் முடிவடைந்த 30 ஆண்டு காலப் போரின் தொடக்கத்தில் தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கு இந்தியா ஆதரவு கொடுத்தது.

இது ஒரு தவறு. அது மீண்டும் இடம்பெற அனுமதிக்கக் கூடாது. அப்படி இடம்பெற்றால் அதனால் நாம் மிகவும் பாதிக்கப்படுவோம்.

சீனாவுடன் அதிகப்படியான நெருக்கத்தை ஏற்படுத்தி இந்தியாவுடன் விரோதத்தை வளர்ப்பது இலங்கைக்கு ஆபத்தானது.

சீனாவுடன் நாம் காதல் கொண்டால், மீண்டும் ஒரு முறை இலங்கையை இந்தியா தண்டிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

சீனாவிடம் இருந்து இலங்கை தொடர்ந்தும் பொருளாதார உதவிகளைப் பெறமுடியும். ஆனால் அதற்காக இந்தியாவைப் பகைக்கக் கூடாது.

இந்திய புலனாய்வு சேவைகளுடன் இலங்கை விரோதமாக நடந்து கொள்வதாக இந்தியா உணர்ந்து கொண்டால், 1980களில் தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கு பயிற்சிகளை அளித்தது போன்று மீண்டும் ஒருமுறை இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்த இந்தியா பயிற்சிகளை வழங்கும்.

இனப்போரின் தொடக்கத்தில், தென்னிந்தியாவில் தளம் அமைத்திருந்த தமிழ்ப் பிரிவினைவாதிகள் படகுகளில் வந்தே தாக்குதல்களை நடத்தினர்.

அப்போது இலங்கையின் அரசியல் தலைவர்கள் பலரும் மேற்கு நாடுகளின் பக்கம் சார்ந்து நின்றனர்.

புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் மேற்குலக சக்திகள் போரை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்த போது இந்தியா கொடுத்த ஆதரவு மிகவும் முக்கியமானது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படும் படை நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தக் கூடிய வல்லமை பெற்ற ஒரே நாடாக இந்தியாவே இருந்தது.

இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் கொண்டிருந்த நெருக்கமான உறவு காரணமாக, போரை நிறுத்தும் முயற்சிகள் சாத்தியப்படவில்லை.

நாம் இந்தியாவைப் பகைத்துக் கொண்டால்,இந்தியா எம்மைத் தண்டிக்கும். ஏனைய பல நாடுகளுடன் சேர்ந்து இந்தியா அதைச் செய்யும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்

# மீன்கள் மீது கதிரியத் தாக்கமா ஆரம்பமாகின ஆய்வுப்பணிகள்

(கொழும்பு)

நாட்டின் கடற்பரப்பில் பிடிக்கப்படும் மீன்கள் கதிரியக்கத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக ஆய்வுகளை அணு சக்தி அதிகார சபை ஆரம்பித்துள்ளது.

பேலியகொட மீன் சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மீன்களின் ஒரு தொகுதியை இவ்வாறு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அணு சக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்தார்.

மீன்களின் மாதிரிகளை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தமது அதிகாரிகள் மீன் சந்தைக்குச் சென்று பெற்றுக்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

தலபத், கெலவல்லா போன்ற தெரிவு செய்யப்பட்ட சில மீன்வகைகள் இவ்வாறு ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளது.

ஜப்பான் ஃபுகுசிமா அணு உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட வெடிப்பினைத் தொடர்ந்து அங்கு கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்பட்டமையே மீன்களை பரிசோதனைக்குட்படுத்துவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கு வருகின்றார் சீனாவின் பிரதி இராணுவத்தளபதி

(கொழும்பு)

சீன இராணுவத்தின் பிரதித் தளபதி ஜெனரல் மா சியாவோதியன் இலங்கைக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அடுத்தமாதம் முதல்வாரம் அவர் இலங்கை வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் இலங்கை வரும் வழியில் புதுடில்லியில் ஒருநாள் தங்கியிருந்து இந்திய பாதுகாப்புத் துறையின் உயர்மட்டங்களுடன் பேச்சு நடத்த விருப்பம் வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இந்தியா அதனை நிராகரித்துள்ளது.

மே 30 ஆம் நாள் தொடக்கம் ஜூன் 2ஆம நாள் வரை இந்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு இறுக்கமான நிகழ்ச்சி நிரல் இருப்பதால், சீன இராணுவ ஜெனரலை சந்திக்க முடியாது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி கூறியுள்ளார்.

எனினும் சீன ஜெனரல் இலங்கைக்கான பயணம் மேற்கொள்வது தொடர்பாக அதிகாரிகளோ,இலங்கை அதிகாரிகளோ தகவல் எதையும் வெளியிடவில்லை.

இலங்கையில் நடைபெறவுள்ள போர்க்கருத்தரங்கில் சீன ஜெனரல் பங்குபற்றுவாரா அல்லது அதற்குப் பின்னர் இலங்கை வரவுள்ளாரா என்ற தெளிவான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

# கே.பி.யிடம் விசாரணை நடத்துவதற்கு நெதர்லாந்து அதிகாரிகளுக்கு அனுமதி



(கொழும்பு)

புலிகளின் நிதி வலையமைப்புத் தொடர்பாக, கே.பி. எனப்படும் செல்வராசா பத்மநாதனிடம் நெதர்லாந்து அதிகாரிகள் விசாரணை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து நீதிபதி முன் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் தாமாக முன்வந்து சாட்சியமளிக்க இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளது.

ஆனால் அவர்களை சாட்சிமளிக்குமாறும் இலங்கை அரசாங்கம் கட்டாயப்படுத்தாது. அவர்கள் முன்வந்தால் மட்டுமே நெதர்லாந்து அதிகாரிகள் விசாரிக்க முடியும்.

கே.பி.யிடம் கேள்வி-பதில் முறையில் சாட்சியம் பெற நெதர்லாந்து அதிகாரிகள் அனுமதிக்கப்படுவர். ஆனால் யார் அவரை விசாரிக்கப் போகின்றனர் என்பது பற்றி எதுவும் தெரியாது.

எவ்வாறாயினும், அவர் சாட்சியமளிக்க முன்வந்தால், அந்த சாட்சியத்தைப் பெறுவது எவராக இருந்தாலும், எவ்வளவு காலம் எடுத்தாலும் அதற்கு இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிக்காது. என்றும் அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

கே.பி. உள்ளிட்ட 13 முன்னாள் புலிகளிடம் விசாரணை நடத்த அனுமதிக்குமாறு இலங்கை அரசிடம் நெதர்லாந்து அதிகாரிகள் அனுமதி கோரியுள்ளதாக நெதர்லாந்து வானொலி செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

# மனிதஉரிமை மீறலில் படையினர் ஈடுபடவில்லை ஐ.நாவுடன் சவேந்திரசில்வா உடன்பாடு



(கொழும்பு)

ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைளுக் கான திணைக்கள அதிகாரிகளை இலங்கைக்கான ஐ.நாவின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா இந்தவாரம் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது. ஐ.நா. அமைதிப்படைக்கு அனுப்படும் படையினர் மனிதஉரிமைமீறல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்களாக இல்லாதிருப்பதை உறுதி செய்யும் உடன்பாட்டில் அவர் கையெழுத்திட்டுள்ள தாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. அமைதிப்படையின் கௌரவத்தை உறுதிசெய்யும் வகையிலேயே ஐ.நா அமைதிப்படைக்கு படையினரை அனுப்பும் உறுப்பு நாடுகளுடன் இத்தகைய உடன் பாட்டை ஐ.நா. செய்து வருகிறது.

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போர்க்குற்றங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில்- அவருடன் மனித உரிமைகள் தொடர்பாக ஐ.நா உடன்பாடு ஒன்றை செய்து கொண்டுள்ளது முரண்பாடானது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் மார்ட்டின் நெர்ஸ்க்கி, இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது இலங்கை என்ற ஒரு உறுப்பு நாட்டுடனேயேவே தவிர, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா என்ற தனிநபருடன் அல்ல என்று கூறியுள்ளார்.

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

19. உணவை உறிஞ்சி உண்ணும் பிராணி எது?
    1. கிளி  2. சிங்கம்  3. சிலந்தி  4. மீன்

20. மூடாமல் சமைக்கப்பட வேண்டிய உணவுப் பொருள் எது?
    1. மரவெள்ளி  2. பலா  3. ஈரப்பலா  4. வற்றாளை

21. இலங்கையின் தேசிய அடையாளங்களில் ஒன்று
    1. நிறைகலசம்  2. வெண்புறா  3. நீலோற்பவம்  4. வாளேந்திய சிங்கம்

22. முட்டையிட்டு இனம்பெருக்கும் பிராணி எது?
    1. அந்துப்பூச்சி  2. வெளவால்  3. எலி  4. மூஞ்சூறு

23. எமது நாட்டுக்கே உரிய பிராணி அல்லாதது எது?
    1. கானான்கோழி  2. கருங்குரங்கு  3. சருகுமான்  4. மயில்

24. கொடி வகையைச் சேர்ந்த தாவரம் எது?
    1. கோவா  2. மரமஞ்சல்  3. அகத்தி  4. ஆமணக்கு

25. வெடித்துப் பரவும் வித்து வகை
    1. காசித்தும்பை  2. துத்திரி  3. பலா  4. சீதேவியார் செங்கழுநீர்

26. வருடத்தில் ஒருமுறை மாத்திரம் காய்ப்பது
    1. எலுமிச்சை  2. மரமுந்திரிகை  3. கொய்யா  4. அன்னாசி

27. ஓணானின் முட்டை காணப்படுவது
    1. மரத்தில்  2. நிலத்தின் கீழ்  3. கூடுகளில்  4. இலைகளின் கீழ்

28. வடமத்திய மாகாணத்தினுள் அடங்காத நகரம் எது?
    1. குருணாகல்  2. பொலநறுவை  3. அனுராதபுரம்  4. மிகிந்தலை


29. உயிர்சத்து வகை அல்லாதது
    1. உயிர்ச்சத்து A  2. உயிர்ச்சத்து L  3 உயிர்ச்சத்து C  4. உயிர்ச்சத்து B


30. இலங்கை எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
    1. 9  2. 8  3. 10  4. 7


31. புனித வெள்ளரசு மரம் இருப்பது
    1. திருகோணமலையில்  2. கண்டியில்  3. அனுராதபுரத்தில்  4. கதிர்காமத்தில்

32. நீரில் வளரும் ஊர் தாவரம்
    1. நாகதாளி  2. யப்பான் ஐக்கொனியா  3. இஞ்சி  4. ஓகிட்

**இவை ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.**

33. 
..........................

34. 
..........................

35. 
..........................

36. 
..........................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I, II
விடைகள்

# கல்விமுரசு

வெளியீடு 15



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1. | 4 | 21. | 2 |
| 2. | 4 | 22. | 2 |
| 3. | 1 | 23. | 2 |
| 4. | 2 | 24. | 2 |
| 5. | 2 | 25. | 3 |
| 6. | 4 | 26. | 1 |
| 7. | 2 | 27. | 3 |
| 8. | 3 | 28. | 3 |
| 9. | 3 | 29. | 3 |
| 10. | 2 | 30. | 3 |
| 11. | 1 | 31. | 1 |
| 12. | 4 | 32. | 2 |
| 13. | 1 | 33. | 2 |
| 14. | 1 | 34. | 3 |
| 15. | 1 | 35. | 3 |
| 16. | 2 | 36. | 1 |
| 17. | 2 | 37. | 1 |
| 18. | 2 | 38. | 1 |
| 19. | 3 | 39. | 1 |
| 20. | 3 | 40. | 1 |

## பகுதி -II

**01.** 1. மலைகளில்  2. கடலைப்
3. மகாவலிகங்கை  4. தண்ணீர் குடிப்பதற்காக
5. நீர்வீழ்ச்சிக்கருகில்  6. மீன்கள்
7. நீர்ப்பாதுகாப்பிற்காக  8. குளோரின்

**02.** 1. பாடினான்  2. கத்தியது
3. பாடினான்  4. திரித்தான்
5. கட்டினான்

**03.** 1. இல்லாததைப் பெற முயலுதல்
2. வெளியிட முடியாத நினைவு

**04.** 1. 1  2. 4  3. 3  4. 2

**05.** 1. என்னைப் பார்க்கவும்  2. மாலை வணக்கம்
3. காலை உணவு

**06.** 1. வீட்டுக்குப் போங்கள்  2. பாகற்காய்
3. பென்சில்

**07.** 1) 4  2) 3  3) 4  4) 1  5) 2
6) 4  7) 3  8) 1  9) 2  10) 4

**08.** 1. மின் உயர்த்தி  2. தைனமோ
3. மடி  4. மஸ்ஜித்/பள்ளிவாசல்
5. நாம்புவ

**09.** 1. பிரண்டை  2. நெல்லி
3. கண்டங்கத்தரி  4. ஊமத்தை

**10.** 1. தேனீ  2. கும்பிடுபூச்சி
3. சிலந்தி  4. இலையான்

**11.** 1. B-37  2. A  3. A-2
4. 7  5. 9

**12.** 1) 309/=
2) 5L 250mL / 5250 ml
3) 114kg 750g
4) 140/=
5) I. 20cm  II. 13cm²/13 சதுர சென்ரிமீற்றர்
6) 14cm
7) 160km
8) 4/4=1
9) 75/=  10) 6 கானில்

**13.** 1. மாதவனும் அவனது தோழர்களும் பாட சாலையை விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர்.
2. அவர்கள் வாழைப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு வீதியில் தோலை எறிந்தனர்.
3. அவ்வீதியால் வந்த பெரியவர் ஒருவர் வாழைப் பழத்தோலில் வழுக்கிக் கீழே விழுந்தார்.
4. அவரது கண்ணாடி, பை என்பன நிலத்தில் விழுந்து விட்டன.
5. அவ்வீதியால் வந்த பெரியவர் ஒருவர் அவ ருக்கு உதவி செய்தார்.
6. வாழைப்பழத் தோலை வீதியில் எறிவது தவ றான செயற்பாடாகும்.

## புள்ளியிடல்

| | |
|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | |
| வினா 01 | = 12 புள்ளி |
| வினா 02 | = 05 புள்ளி |
| வினா 03 | = 03 புள்ளி |
| வினா 04 | = 05 புள்ளி |
| வினா 05 | = 03 புள்ளி |
| வினா 06 | = 03 புள்ளி |
| வினா 07 | = 10 புள்ளி |
| வினா 08 | = 05 புள்ளி |
| வினா 09 | = 06 புள்ளி |
| வினா 10 | = 06 புள்ளி |
| வினா 11 | = 10 புள்ளி |
| வினா 12 | = 20 புள்ளி |
| வினா 13 | = 12 புள்ளி |
| மொத்தப்புள்ளி | = 100 புள்ளி |

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ரூபா 30 இற்கு 5 பழங்கள் வாங்கலாம். ஒரு பழத்தின் விலை ரூபா 2 ஆல் அதிகரித்தால் ரூபா 80 இற்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்?

..........................................................................................

2. ஒரு பெட்டியில் 400 பிஸ்கட்டுக்கள் இருந்தன. ஒரு வகுப்பில் உள்ள மாணவர் ஒருவருக்கு 10 பிஸ்கட் வீதம் வழங்கப்பட்டது. 30 பிஸ்கட்டுக்கள் எஞ்சியது. வகுப்பிலுள்ள மாணவர் எத்தனை பேர்?

..........................................................................................

3. ஒரு தாயின் வயதைவிட மகனின் வயது 15 வருடங்கள் குறைவாகும். தாயின் வயதைவிட தகப்பனின் வயது 10 வருடங்கள் கூடுதலாகும். தகப்பனின் வயது 50 வருடங்கள் ஆயின் மகனின் வயது யாது?

..........................................................................................

4. ரமேஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து 8.45 மணிக்குப் புறப்பட்டு 15.25 மணிக்கு பளையை அடைந்தான். அவன் பிரயாணத்துக்கு எடுத்த நேரம் எவ்வளவு?

..........................................................................................

5. ஒரு கூடையில் 140 மணிக்ள் உண்டு. இவற்றில் மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய நிறங்கள் உண்டு. மஞ்சளைப் போல 2 மடங்கு சிவப்பு மணிகளும், சிவப்பைப்போல 2 மடங்கு பச்சை மணிகளும் உண்டு. ஆயின் சிவப்பு மணிகளின் எண்ணிக்கை எவ்வளவு?.

..........................................................................................

6. ஒரு வழைக்குலையில் மொத்தம் 180 பழங்கள் உண்டு. இவற்றில் 30 பழுக்காதவை. பழுத்த பழங்கள் 30 பேருக்குச் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன. ஒருவருக்கு எவ்வளவு கிடைக்கும்?

..........................................................................................

7. 250 மில்லிலீற்றர் எண்ணெயின் விலை ரூபா 14.50 எனின் 1.5 லீற்றர் எண்ணெயின் விலை யாது?

..........................................................................................

8. செவ்வகமொன்றின் நீளம் அகலத்தின் இரண்டு மடங்கு அதன் சுற்றளவு 60 மீற்றர் எனில் நீளம் யாது?

..........................................................................................

9. பிற்பகல் 2.25 ஐ 24 மணிக்கடிகார நேரமாக எழுதுக?

..........................................................................................

10. காந்தன் கணித வினாத்தாளொன்றைச் செய்து முடிப்பதற்கு 3 மணித்தியாலம் எடுத்தான். வினாத்தாள் செய்து முடிக்கும்போது நேரம் முற்பகல் 10.45 ஆயின் ஆரம்பித்த நேரம் என்ன?

..........................................................................................

11. இரு கம்பங்களில் இடையிலுள்ள தூரம் 5 மீற்றர் ஆகும். 18 கம்பங்களிற்கு இடையிலுள்ள தூரம் எத்தனை மீற்றர்?


..........................................................................................

12. 1 கிலோகிராம் பருப்பின் விலை ரூ.45 எனின், 1 கிலோகிராம் 250 கிராம் பருப்பின் விலை யாது?

..........................................................................................

13. ரூபா 600 இற்கு 50 தோடம்பழங்கள் வாங்கலாம். ஒரு தோடம்பழத்தின் விலை 2 ரூபாவால் குறைந்தால் அதே பணத்துக்கு எத்தனை தோடம்பழங்கள் வாங்கலாம்?

..........................................................................................

14. 


படத்தில் காட்டப்பட்டுள்ள கடிகாரம் சரியான நேரத்திலும் 15 நிமிடம் முந்தி ஓடுகிறது. சரியான நேரம் என்ன?

..........................................................................................



**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. வேகமாக - கவலையாக - மகிழ்ச்சியாக போன்ற சொற்கள் வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?
   1. பெயர் அடை மொழியாக 2. வினைச் சொற்களாக
   3. பெயர்ச் சொற்களாக 4. வினை அடைமொழியாக

2. நிறைந்த - உயர்ந்த - மெல்லிய போன்ற சொற்கள் வாக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன?
   1. பெயர் அடைமொழிகளாக 2. வினைச் சொற்களாக
   3. பெயர்ச் சொற்களாக 4. வினை அடைமொழியாக

**கீழே தரப்பட்டுள்ள சொற்களில் தடித்த எழுத்தினால் தரப்பட்டுள்ள சொல் குறிக்கும் கருத்தினை எழுதுக.**

3. எங்கள் வீட்டு மாமா அத்தி பூத்தாற்போல வந்திருந்தார்.

..........................................................................................

4. தொழிலாளர் அல்லும் பகலும் வேலை செய்கின்றார்.

..........................................................................................

**மரபுத் தொடர்களின் கருத்தினை எழுதுக.**

5. கம்பி நீட்டினர் :..........................................................

6. முகங்கொடுத்தல் :..........................................................

7. கடன் கழித்தல் :..........................................................

**பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

8. நன்றி தாயே வணக்கம் வருகிறேன்

9. கண்ணன் நான்தான் பாட்டை எழுதினேன் என்று மகிழ்வுடன் கூறினான்

**பின்வரும் பழமொழிகளின் கருத்தின எழுதுக.**

10. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.

..........................................................................................

11. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்

..........................................................................................

**கீழே தரப்பட்டுள்ள சொற்களின் இணைமொழிச் சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.**

12. அவர்கள் நன்மை தீமைகளில் பங்குபற்றினர்.

..........................................................................................

13. அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்.

..........................................................................................

14. வாழ்க்கை மேடுபள்ளம் நிறைந்தது

..........................................................................................

**பின்வரும் சொற்களின் இரட்டைக் கிழவியைத் தெரிவு செய்து எழுதுக.**

15. வெடிகள் படபடவென்று வெடித்தன

..........................................................................................

16. பானைகள் கடகடவென்று உருண்டன

..........................................................................................

**கீழே தரப்பட்டுள்ள சொற்களில் அடைமொழிச் சொற்களின் கீழ்க் கோடிடுக.**

17. அழகிய ஓவியத்தை சுவரிலே தொங்கவிட்டார்கள்.

18. கறுப்புப் பூனை எலியைப் பிடிக்க மெதுவாகப் பதுங்கியது.

# வெளியே இதயம்



உடலுக்கு வெளிப்புறத்தில் இதயம் ஒட்டியிருந்த நிலையில் பிறந்த இரண்டு வயது சிறுமியொருவர் ரஷ்யாவில் வாழ்ந்து வருகிறாள். இந்த உடற்கோளாறு எக்டோபியர் கோர்டிஸ் எனக் குறிப்பிடப்படுகிறது. 80 லட்சம் பேர்களில் ஒருவருக்கு இந்த நிலை ஏற்படக்கூடும் என மருத்து வர்கள் கூறுகின்றனர். மேற்படி சிறுமி ரஷ்யாவின் நொவோ ரோஸிஸ்க் பகுதியில் வசித்து வரு கிறாள். இக்குழந்தையின் மருத்துவ சிகிச் சைக்கு நிதிஉதவி தேவைப்படுவதாக இக் குழந்தையின் தாய் மிஹி டிரியன்ட் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், இக்குழந்தையின் இதயத்தை தொடர்ந்தும் இயங்கச் செய்வதற்கு 5 வகையான சிகிச்சை களை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

அதற்கு சுமார் 20,000 ஸ்ரேலிங் பவுண்களை திரட்ட வேண்டியுள்ளது என்று மிஹிடிரியன்ட் தெரிவித்துள் ளார். உண்மையில் இது மிகவும் கடின மான காரியம். நாங்கள் பண வசதி கொண்டவர்கள் இல்லை. அதனால் நாம் எப்படி அவ்வளவு தொகை பணத்தை தேடமுடியும்? என்று கவலையுடன் கேட்கிறார் அவர். அவளது இதயத்தை உள்ளே வைப் கொள்ள வேண்டுமென்று ளனர். அதற்கு மில்லியன் வாகும் என்றும் கூறுகின்றனர். அவ்வளவு தொகையான பணத்தை குழந்தையின் அடுத்த முடியாது என்று மிஹிடிரியன்ட்

பதற்கு சத்திரசிகிச்சை மேற் வைத்தியர்கள தெரிவித்துள் கணக்கிலான பணம் செல இப்போது நாங்கள் தேடாவிட்டால் எமது பிறந்ததினத்தை பார்க்க தெரிவித்துள்ளார்.

# வயதானவர் பெண்மணி



உலகில் உயிர் வாழும் அதி கூடிய வயதான நபராக பிரேஸிலைச் சேர்ந்த மூதாட்டியொருவர் கின்னஸ உலக சாதனைப்புத்தக வெளியீட் டாளர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். மரியா கோம்ஸ் வலன்டிம் என்ற இப்பெண்ணுக்கு 114 வயதாகிறது. இவர் 1896 ஆம் ஆண்டு ஜுலை 9ஆம் திகதி பிறந்ததாக அவரின் பிறப்புச் சான்றிதழ் தெரிவிக்கின்றது. ஏற்கெனவே உலகின் அதிக வயதான நபராக அறிவிக்கப்பட்டிருந்த அமெரிக்காவின் ரூடிளி பெஸி கூப்பரைவிட இவர் 48 நாட்கள் மூத்தவர் என்பது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

பெஸி கூப்பர் அதே வருடம் ஓகஸ்ட் 26ஆம் திகதி பிறந்தவராவார். மரியா கோம்ஸ் வலன்டிம் 1896 ஆம் ஆண்டு பிறந்தமைக்கும் 1913 ஆம் ஆண்டு திருமணம் செய்தமைக்கும் 1916ஆம் ஆண்டு தனது முதலாவது மகனை பெற்றதையும் ஆவணங்கள் உறுதிப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. முதுமையியல் துறை ஆய்வாளரான பிரேஸிலை சேர்ந்த பேராசிரியர் ஒருவரும் மரியா வலன்டிம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு அவரின் வயதை உறுதிப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலின் மினாஸ் ஜேராய் மாநிலத்தைச் சேர்ந்த   kiuah வலன்டிம் 1946 ஆம் ஆண்டு கணவனை இழந்தார். அதன் பின் அவர் சக்கர நாற்காலியிலே தமது காலத்தை செலவிட்டு வருகின்றார். மிகச்சிறந்த உணவுப்பழக்கமே அவரது நீண்ட ஆயுளுக்குக் காரணம் என அவர் கூறுகிறார். இது மாத்திரமின்றி வைன் குடிப்பதிலும் ஒரு கை பார்த்துவிடுகிறார் இவர்.

# இதய நோய் குறைய

மீன் உணவு வகைகளை தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் வயதான பெண்களுக்கு ஏற்படும் இதயநோய் அபாயம் குறைகிறது என புதிய ஆய்வு கூறுகிறது.

வறுத்த மீனை சாப்பிடுவதை காட்டிலும், இதர முறையில் சமைத்து சாப்பிடும் மீன் உணவே நல்ல பலனை தருகிறது. வறுத்த மீனை வாரம் ஒருமுறை சாப்பிடுவதால் இதய நோய் பாதிப்பு 48 சதவீதம் கூடுதல் ஆகிறது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஓவனில் பதப்படுத்தப்பட்டு சூடு செய்யப்பட்ட மீன் உணவு களை சாப்பிடுவது நல்ல பலனைத் தரும். அமெரிக்காவில் உள்ள விஞ்ஞானிகள் சராசரியாக 63 வயது உள்ள பெண்கள் 84 ஆயிரம் பேரிடம் ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது ஓவன் முறையில் சூடுபடுத்தப்பட்ட மீன் உணவு வகைகளை சாப்பிட்ட பெண்களுக்கு இதயநோய் பாதிப்பு 30 சதவீதம் குறைந்து இருப்பது தெரியவந்தது. இத்தகைய உணவு முறையை கடைபிடிக்காதவர்களை ஒப்பிடு கையில் பொரிக்காத மீன்களை சாப்பிட்டு வந்தவர்கள் நல்ல உடல்நிலையுடன் இருப்பது தெரியவந்தது.

கறுப்பு மீன்கள், சாலமோன் மீன்கள், இதர துனா மற்றும் வெள்ளை மீன்கள் சிறந்த பலன் அளிப்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். சிகாகோவின் நோர்த் வெஸ்டர்ன் பல்கலைகழகத்தின் பேராசிரியர் டொனால்ட்ரிலாயிட் ஜோன்ஸ் தலைமையில் இந்த ஆய்வு நடந்தது.

மீன்களை வறுத்து சாப்பிடுவதால் மீன் சத்துகள் கிடைக் காமல் போவதுடன் அத்தகைய உணவு தயாரிப்பு உடலுக்கு தீங்கு விளைவிக்கும் என பேராசிரியர் டொனால்ட் தெரிவித்தார்.

# கால்விரலால் பியானோ



இரண்டு கைகளையும் தனது சிறு பராயத்திலேயே இழந்த சீனாவைச் சேர்ந்த ஒருவர், கால் விரல்களால் பியானோ வாசித்து இசை கலைஞராகப் புகழ்பெற்றுள்ளார். லியூ வெய் (Liu Wei) என்பவரே இவ்வாறு கால் விரல்களால் பியானோ வாசிப்பாளராகியுள்ளார். சைனாஸ் கொட் டலென்ட் எனும் நிகழ்ச்சியில் பங்குபற்றிய அவர், காலுறையை நீக்கிவிட்டு தனது கால்விரல்களால் பியானோ வாசிக்கத் தொடங்கிய போது பார்வையாளரின் வரவேற்பில் அரங்கம் அதிர்ந்தது

மற்றவர்கள் தங் களது கரங்களால் செய்யும் எதையும் நான் எனது கால் களால் செய்வேன் என லியூ வெய் தெரிவித்துள்ளார். தற்போது 23 வயதான அவர், 10வயது சிறுவனாக இருக்கும் போது தனது கைகளை இழந்துள்ளார். அதன் பின் அவர் அனைத்துத் தேவைகளுக்கும் தனது கால்விரல் களையே பயன்படுத்திக்கொண்டார். முக்கியமாக இணையத்தள பாவனை,உணவு உண்பது, ஆடைகள் அணிவது, பல் துலக்குவது போன்ற அனைத்து தேவைகளுக்கும் தனது கால் விரல் களையே பயன்படுத்தியுள்ளார். உல்லாசமாக சென்று, நான் வாகனம் ஓட்டுவதற்கு இயல வேண்டும் என விரும்புகின்றேன்.

உண்மையில் அதை தவிர நான் செய்ய விரும்பும் வேறு விடயம் எதுவும் இல்லை. என்று தெரிவித்துள்ளார். பீஜிங்கில் வசித்து வரும் அவர் இசை எனக்கு சுவாசம் போன்றது என்று தெரிவித்துள்ளார். அவரது முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் போது பார்வையாளர்கள் எழுந்து நின்று கௌரவித்தனர். அதேவேளை அதிகமான பார்வையாளர்கள் அவரைப் பார்த்து கண்ணீர் சிந்தினர். கடந்த 2010ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கால்களால் பியானோ வாசித்த படி பாடி சீனாவின் சிறந்த திறமைசாலி என்ற விருதை பெற்றார்.

# சமையல் கலைக்கு இணையம்



சமையல் கலை என்பது அனைவருக்கும் அமுது படைக்கும் ஒரு உயர்ந்த கலை. இந்த கலை எளிதில் எல்லோருக்கும் வந்துவிடாது.

இருந்தாலும் விடா முயற்சியும், பயிற்சியும் இருந்தால் சமையல் மட்டுமல்ல உணவுப்பண்டம் மற்றும் பலகாரம் செய்யும் முறையிலும் நாம் திறமையானவர்களாக ஜொலிக்கலாம்.

சிறந்த உணவு என்றால் சமைக்காத உணவு தான். ஆனால் பெரும்பாலும் மக்கள் சமைக்காத உணவை விரும்புவதில்லை. காரணம் ருசி போன்ற காரணங்களால் மக்கள் நாளும் ஒரு சமையல் கலையை கற்றுக்கொண்டு முயற்சித்துகொண்டே இருக்கின்றனர். சமையல் உணவில் நமக்கு திறமையை வளர்ப்பதற்காக ஒரு தளம் உள்ளது.

இத்தளத்திற்கு சென்று பலவகையான சமையல் எப்படி செய்ய வேண்டும் என்பதை சில நிமிடங்களில் எளிதாக படத்துடன் அறியலாம். சாதாரண லெமன் சாதம் எப்படி செய்ய வேண்டும் என்பதில் தொடங்கி இப்போது மிகப்பெரிய உணவு அங்காடிகளில் வழாங்கப்படும் உணவுப் பொருட்கள் வரை அனைத்தையும் எப்படி செய்ய வேண்டும் என்பதை படத்துடன் விளக்கின்றனர்.

ஒவ்வொரு வகையான உணவு வகைகளையும் Slideshow மூலம் பார்க்கலாம். வாசகர்கள் தங்கள் அனுபவத்தையும் பதிவு செய்யலாம். தங்களுக்கு பிடித்த சமையல் வகை களுக்கு மதிப்பெண் கொடுக்கலாம். மற்றவருடன் மின்னஞ்சல் மூலம் பகிர்ந்து கொள்ளும் வசதியும் இருக்கிறது.

இணையதள முகவரி http://visualrecipes.com/

# முக்கிய கோப்புகளை மறைக்க...

நம்முடைய சில முக்கியமான கோப்புகளை பாதுகாக்க பல முறை களை கையாளுவோம். அந்த வகையில் ஏதேனும் ஒரு போட் டோவின் பின் புறத்தில் நம்முடைய கோப்புகளை மறைத்து வைக் கலாம். சாதரணமாக அந்த கோப்புகளை ஓபன் செய்தால் போட்டோ மட்டுமே தெரியும். அதற்கு பின்னால் இருக்கும் உங்களின் கோப்புகள் தெரியாது. Winzip, Winrarஆகிய மென்பொருட்களில் ஓப்பன் செய்தால் மட்டுமே பின்புறத் தில் உள்ள கோப்புகளை பார்க்க முடியும்.

1. இதற்கு முதலில் நீங்கள் மறைக்க விரும்பும் கோப்புகளை மொத்தமாக Compress செய்து கொள்ளுங்கள்.

2. அடுத்து கீழே உள்ள தர விறக்க சுட்டியை க்ளிக் செய்து மென் பொருளை உங்கள் கணனியில் தரவிறக்கி கொள்ளுங்கள்.

3. இந்த மென்பொருளை நிறுவ வேண்டியதில்லை. தரவிறக்கம் செய்த வுடன் நேரடியாக இயக்கலாம்.

4. அந்த மென்பொருளை ஓப்பன் செய்து கொள்ளுங்கள். அதில் picture என்ற கட்டத்தில் உங்களின் ஏதோ ஒரு படத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள்.

5. அடுத்து Compressed file என்ற இடத்தில் நீங்கள் compress செய்து வைத்து இருக்கும் பைலை தேர்வு செய்து கொள்ளுங்கள்.

6. Output Picture file என்ற இடத்தில் ஒரு jpg கோப்பை தேர்வு செய்து

இதில் நீங்கள் மேலே Picture பகுதியில் கொடுத்த அதே கோப்பை கூட தேர்வு செய்து கொள்ளவும். அப்படி கொடுத்தால் Replace செய்ய வேண்டும் என்ற செய்தி வரும் அதில் Yes கொடுத்து விடுங்கள்.

7.இப்பொழுது நீங்கள் அந்த மூன்று கட்டங்களையும் நிரப்பிய வுடன் அங்கு உள்ள ok கொடுத்து விடுங்கள்.

8. அந்த ok பட்டனை அழுத்திய வுடன் உங்களுடைய கோப்புகள் மறைக்கப்பட்டது என செய்தி வரும். அதை ok கொடுத்து வந்திருக்கும் உங்கள் கோப்பை சாதரணமாக ஓபன் செய்து பாருங்கள்.

9.வெறும் படம் மட்டுமே தெரியும். பின்னால் இருக்கும் நம் கோப்புகள்

யாருக்கும் தெரியாது. அதை Winzip அல்லது Winrar மென் பொருட்களில்ஓபன்செய்தால்மட்டுமே அந்த போட்டோவின் உள்ளே இருக்கும் கோப்புகள் தெரியும். அதை நாம் உபயோகித்து கொள்ள லாம்.

10. இது போல் நம் கோப்பு களை வைத்தால் யாருக்கும் சந்தேகம் வராமல் நம் ரகசியமா கவும், பாதுகாப்பாகவும் வைத்து கொள்ளலாம்.

தரவிறக்கு:-http://www.box.net/shared/hn3pur9gf9

## கணனி மூலை

# கடல் எல்லைக் கோட்டைக் கண்டறிவதற்கு தானியங்கி நிலையம் அமைக்கக் கோரி வழக்கு

(சென்னை)


இலங்கை, இந்தியக் கடற் பகுதியில் இரு நாடுகளுக்குமான எல்லைக்கோட்டை கண்டறியும் தானியங்கி நிலையம் அமைக் கப்பட வேண்டுமென சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணி ஞானேஸ்வரன் வழககுத் தாக்கல் செய்துள்ளார்.

சர்வதேச கடல் எல்லையில் கடந்த சில ஆண்டுகளாக 400-இற்கும் மேற்பட்ட மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலி யானார்கள். அவர்கள் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இத னால் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்க அஞ்சுகிறார்கள்.

இதைத் தடுக்க தமிழக கடல் எல்லை கோட்டை அடையாளம் காட்டும் தானி யங்கித் தொடர் நிலையங்களை அமைக்க வேணடும். அனைத்துப் படகுகளிலும் ஜி.பி.எஸ். கருவிகளை இலவசமாகப் பொருத்த வேண்டும். இதன் மூலம் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுத்திவிடலாம். படகுகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத்துவது பற்றி நான மத்திய மாநில அரசுக்களுக்கு கடந்த மாதம் 18ஆம் திகதி மனு கொடுத்தேன். இதன் மீது எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. எனவே தமிழக மீன்பிடி படகுகளில் ஜி.பி.எஸ். கருவி பொருத் தும்படி அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அவர் அதில் குறிப்பிட்டுள்ளார.

## இந்தியச் செய்திகள்

# நட்சத்திர கிரிக்கெட் போட்டி தென்னிந்திய கப்டன் சூர்யா



(சென்னை)

தமிழ், கன்னடம், இந்தி திரைப்பட நடிகர்கள் பங்கேற்கும் நட்சத்திர கிரிக்கெட் போட்டி பெங்களூரில் எதிர் வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி தொடங் குகிறது.

இதுகுறித்து சென்னையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில், தென்னிந் திய நடிகர் சங்கத்தின் தலைவர் நடிகர் சரத்குமார், முக்கிய நட்சத்திர வீரர் சூர்யா உட்பட போட்டியில் பங்கேற்கும் தமிழ் திரையுலக நட்சத்திரங்கள் பங்கேற்றனர். இவர்கள் பங்கேற்கும் கிரிக்கெட் அணி யின் பெயர் சென்னை ரைனோஸ்.

இந்த போட்டியில் நடிகர்கள் சரத் குமார், சூர்யா, மாதவன், ஆர்யா, விஷால், பரத், அபாஸ், விஷ்ணு, சாந்தணு, விக் ராந்த், ரமணா, மிர்ச்சி சிவா, ஜித்தன் ரமேஷ் ஆகியோர் பங்கேற்கின்றனர். அப்போது இந்த கிரிக்கெட் போட்டிக் கான டீசர்ட் மற்றும் லோகோ வெளியி டப்பட்டது.

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய நடி கர் சூர்யா, நிச்சயமாக சென்னை ரைனோஸ் அணி வெற்றி பெறும். அதற்கான பயிற் சியில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம் என்று உரக்கச் சத்தம் போட்டு உற்சாகமாகச் சொன்னார்.

# கனிமொழி சிறையில் இருப்பதால் சோனியாவைச் சந்திக்கவில்லை

## என்கிறார் கருணாநிதி

(சென்னை)



சோனியாவைச் சந்திக்கும் வாய்ப்பும், நேரமும் இருந்தது. என் மகள் கனி மொழி சிறையில் இருந்ததால், இந்த நேரத்தில் சோனியாவைச் சந்திப்பது முறையாக இருக்காது என்பதற்காகவே நான் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண் டேன். என்று தி.மு.க தலைவர் கருணா நிதி கூறினார்.

இது தொடர்பா செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது-


தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பறிக்கப் பட்ட சொத்துகள் உரிய முறையில் மீட் கப்படும் என்று ஜெயலலிதா கூறியுள் ளார். அப்படி ஏதாவது இருந்தால் அதைத திரும்பப்பெற்று உரியவர்களிடமோ அல் லது உரிய அமைப்புகளிடமோ ஒப்ப டைப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேப மும் இல்லை.

இதைப்போல ராஜீவ்காந்தி கொலை யில் தி.மு.க.விற்கும் பங்கு உண்டு என் பதுபோல ஒருவர் (பத்மநாதன்) கூறிருக் கிறாரே என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு, அவர் யாரென்றும், அவர் என்ன சொன்னாரென்றும் எங்களுக்குத் தெரியாது என்று கூறினார்.

# சிறுநீரக பாதிப்பிற்கான சிகிச்சை லண்டன் செல்கின்றார் ரஜினி

(சென்னை)

ரஜினியில் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், அவரது சிறுநீரகப் பாதிப்பிற்கு சிகிச்சை பெறுவதற்காக லண் டன் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.



நடிகர் ரஜினிகாந்த் 26 நாட்களாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இரண்டு தடவை மயிலாப்பூரில் உள்ள இச பெல்லா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார்.


கடந்த 13ஆம் திகதி முதல் போரூர் ராமச்சந்திரா ஆஸ்பத்தியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த அவர் தற்போது தனியறைக்கு மாற்றப்பட் டுள்ளார். மூச்சுக்குழாய் நோய் தொற்று, குடல்நோய், சிறுநீரகக் கோளாறு போன் றவை ரஜினிக்கு இருந்தன. அவற்றுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

சிறுநீரக செயல்பாடு பாதிப்பு காரணமாக ரஜினிக்கு டயாலிசிஸ் சிகிச்சை அளிக்கப் பட்டது. இதுவரை 5 தடவை டயாலிசிஸ் சிகிச்சை அளித்தனர். உடல்நிலையில் இப் போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் டயா லிசிஸ் சிகிச்சையை நிறுத்தி விடலாமா என்று டாக்டர்கள் ஆலோசிக்கின்றனர்.



**சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஆயர் சின்னப்பா தலை மையில் கிறிஸ்தவ சபைகளின் பேராயர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.**

# நோயாளரை ஏற்றிச் சென்று கொண்டிருந்த வேளை வீட்டின் கூரை மீது விழுந்த அம்புலன்ஸ் விமானம்




(பரிதாபாத்)

புதுடில்லி அருகே வீட்டின் மீது அம்புலன்ஸ் விமானம் மோதி விபத்துக் குள்ளானதில், அதில் பயணம் செய்த விமானப் பணியாளர், நோயாளி உட்பட 10 பேர் பலியாயினர். 2 பேர் காயமடைந்துள்ளனர்.

பீகார், பாட்னாவிலிருந்து நேற்றிமுன்னிரவு டில்லிக்குச் சிறிய ரக அம்புலன்ஸ் விமா னம் ஒன்று புறப்பட்டுச் சென் றது. அதில், விமானிகள் உட் பட எட்டு பேர் பயணம் செய் தனர். இந்நிலையில், இரவு 10.45 மணியளவில் பரிதா பாத் அருகே விமானம் சென்ற போது, பலத்த காற்று வீசியதாகக் கூறப் படுகிறது.

அப்போது, கட்டுப்பாட்டை இழந்த விமானம், அப்பகுதியில் உள்ள குடி யிருப்பு பகுதியில் உள்ள இரண்டு மாடி வீட்டின் மீது விழுந்து நொருங்கியது. அப்போது அந்த வீட்டில் 10 பேர் வரை இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தில் 10 பேர் இறந்துவிட்டதாகவும், அவர்களது உடல் மீட்கப்பட்டதாகவும் தெரி விக்கப்படுகிறது.

2 பேர் காயமடைந்து மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தகவ லறிந்த அரியானா பொலிசார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடம் சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டர்.

இந்த விமானத்தில் பாட்னாவில் சிறு நீரகக் கோளாறு காரணமாக அவதிப் பட்டு வந்த ராகுல் ராய் என்பவர் மருத்து வர்களுடன் டில்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்




**பெயர் :** மகாலிங்கம் தர்மிகா
**முகவரி :** விவேகானந்த நகர், கிளிநொச்சி.

## பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார் களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப் பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் எனபதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கடாபி பதவி விலகுவது குறித்துப்பேச தென்னாபிரிக்க அதிபர் லிபியா பயணம்



(ஜோஹான்ஸ்பர்க்)

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜுமா,அடுத்த வாரம் லிபியா செல்கிறார். அப்போது அவர் அந்த நாட்டின் ஜனாதிபதி கடாபி பதவி விலகுவது தொடர்பான சமரசத் திட்டம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார். துருக்கி அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அவர் இந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்.

ஆப்பிரிக்க ஒன்றியம், லிபியாவில் போரை நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாக ஜுமா கடந்த ஏப்ரல் மாதம் லிபியா சென்றார். ஆனால் ஒரு சில மணி நேரங்களிலேயே அவரது திட்டம் நிறைவேறாமல் போனது.

# கடற்படைத்தளம் அமைக்க உதவுமாறு பாகிஸ்தான் கோரிக்கை சீனா மறுப்பு



பாகிஸ்தானில் இரண்டாவது கடற்படை தளம் அமைப்பதற்கு சீனா உதவ வேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவ அமைச்சர் அகமட் முக்தார் கேட்டுக்கொண்டார். இந்த கோரிக்கையை ஏற்க சீனா மறுத்து விட்டது.

பாகிஸ்தான் கடற்படை தளத்துக்குள் தலீபான்கள் புகுந்து தாக்குதல் நடத்தியதன் எதிரொலியாக தான் இவ்வாறு மறுப்பு கூறப்பட்டு இருக்கலாம் என்று தெரிகிறது. பாகிஸ்தானில் கராச்சி நகரில் ஒரு கடற்படை தளம் உள்ளது. இதுதவிர கவ்தார் என்ற துறைமுகத்தில் இன்னொரு கடற்படை தளம் அமைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் சீனாவை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# ஆணவம் மிக்கவர் ஒபாமா என்கிறார் பர்வேஷ் முஷரப்

(புதுடெல்லி)

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஷ் முஷாரப் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்தபேட்டியில் அமெரிக்க அதிபர் ஒபாமா ஆணவம் பிடித்தவர் என்று விமர்ச்சித்துள்ளார். பாகிஸ்தானின் புகுந்து ஓசாமா பின்லேடனை கொல்லப்பட்ட விதமே ஒபாமா ஒரு ஆணவம் பிடித்தது என்று உலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளது. என்றார். முஷாரப் அனுமதியின்றி அந்நிய நாட்டிலிருந்து தாக்குதல் நடத்த எந்தவொரு நாட்டிற்கும் அதிகாரம் இல்லை மேலும் எல்லாகட்டுப்பாடுகளையும் மீறி பாகிஸ்தானில் புகுந்து அனுமதியின்றி ஓசாமா பின்லேடன் மீது தக்குதல் நடத்தி இருந்தது அநாகரிகமான செயல் என்றும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

# லெனின் உடலை புதைக்கக் கூடாது ரஷ்யாவில் தொடர்கின்றது சர்ச்சை

(மொஸ்கோ)

கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் உடலைப் புதைப்பது என்பது அவசரமாக எடுக்கப்பட்ட முடிவு. இதுபோன்ற முடிவுகள் சமூகத்தில் கொந்தளிப்பையே ஏற்படுத்தும் என்று ரஷ்ய ஓர்த்தடாக்ஸ் தேவாலயம் எச்சரித்துள்ளது.

சோவியத் ரஷ்யாவின் தலைவரான விளாடிமிர் லெனினின் உடல் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் அவருக்கான சமாதிக் கட்டடத்தில் பதப்படுத்தி. வைக்கப்பட்டுள்ளது. ரஷ்யா மட்டுமின்றி உலகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அவரது உடலைப் பார்க்க அங்கு செல்கின்றனர்.

சோவியத் ரஷ்யா சிதைந்த பின் லெனின் உடலைப் புதைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது. சமீபகாலமாக அக்கோரிக்கை வலுத்தும் வருகிறது. சமீபத்தில் அங்கு நடத்தப்பட்ட பொது கருத்துக் கணிப்பில் 60 சதவீதம் பேர் அவரது உடலைப் புதைப்பதற்கு ஆதரவளித்தனர். 30 சதவீதம் பேர் மட்டுமே அவரது உடல் பேணப் பட வேண்டும் என்று கூறினர்.

இந்நிலையில் ரஷ்ய ஓர்த்தோடாக்ஸ் தேவாலயம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: லெனினின் உடலைக் காட்சிக்கு வைப்பது என்பது ரஷ்யப் பண்பாட்டுக்கு பொருத்தமானதல்ல தான். ஆனால் அவரது உடல் பற்றிய எவ்வித முடிவுகள் எடுப்பதற்கு முன் பல்வேறு சமூகக் குழுக்களின் கருத்துக்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.



சமூகக் கொந்தளிப்புகளை உருவாக்கும் முடிவுகளை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். கடந்தாண்டில் ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் இதுகுறித்துப் பேசிய போது,"லெனின் உடல் பற்றிய முடிவு எடுக்கக் கூடிய காலம் இன்னும் வரவில்லை" என்று குறிப்பிட்டார்.

# சிதைந்த ஹெலிகொப்டர் பாகங்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டன

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க தேடுதல் வேட்டையில் பலியான ஓசாமா பின்லேடன் கொல்லப்பட்ட போது ஹெலிகொப்டரை அமெரிக்க சிறப்பு படையினர் பயன்படுத்தினர். ஆனால் அங்கு நடைபெற்ற சண்டையில் ஹெலிகொப்டர் ஒன்று சேதமானது இதையடுத்து அமெரிக்க படையினர் சேதமான ஹெலிகொப்படரை அங்கேயே விட்டுவிட்டு பின்லேடன் உடலை மற்றொரு ஹெலிகொப்டரில் எடுத்து சென்றனர். கடந்த ஒரு மாதங்களாக பாகிஸ்தானிடம் சேதமான ஹெலிகொப்டரின் பாகங்களை பாகிஸ்தான் சீனாவிற்கு கொடுத்துவிட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது. இதனால் பாகிஸ்தான் சிதைந்த ஹெலிகொப்டரின் பாகங்களை அமெரிக்கா விடம் ஒப்படைத்துள்ளது.

# வெள்ளி விருந்து

## இறை வழிபாடும் அதன் பயனும்

சைவசமயிகள் ஆலயவழிபாடு செய்யும் போது அதற்கான விதி முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆலயத்தைச் சமீபித்ததும் கால் கழுவ வேண்டும். பின்பு கோபுர தரிசனம் முடித்து சிவசிவ என்று சொல்லிக்கொண்டு உட்சென்று கொடித்தம்பத்தையும், பலீ பீடத்தையும், நந்திதேவரையும் வணங்கிப் பின்பு விநாயகப் பெருமானைத் தலையிலே குட்டி மும்முறை தோப்புக்கரணமிட்டு வழிபாடியற்ற வேண்டும்.

அதற்குப் பிறகு நந்திதேவரை வணங்கி பிரபுவே! அடியேன் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை வணங்கி வாழ்த்துவதற்கு அனுமதி தருமாறு வேண்டுதல் செய்யவேண்டும். பின்னர் மூன்று முறையோ அல்லது ஐந்து முறையோ கோயிலைச் சுற்றிவரவேண்டும். நாங்கள் கோயிலைச் சுற்றி வரும் போது பிறவார்த்தைகள் எதுவுமே பேசக்கூடாது ஆலய வழிபாட்டினால் மன ஒருமைப்பாடும், ஆறுதலும் கிடைக்கும்.

இறைவனின் நாமத்தை உச்சரித்த வண்ணம் கைகளைக்கும்பிட்ட நிலையில் வைத்துக்கொண்டு கால்களை மெல்ல மெல்ல அடிஎடுத்து வைத்துப்பயபக்தியுடன் திருவீதி வலம் வருதல் வேண்டும். அந்த நேரத்தில் சிவசிந்தனையுடன் தேவார திருவாசகங்களை ஓதிக்கொண்டு ஐம்புலன்களையும், அடக்கிக் கொள்ளவேண்டும். அப்போது தான் பயன் கிடைக்கும்

இவ்வாறு ஆலயத்தை வலம்வந்த பின்னர் மூலஸ்தானத்துக்கு நேராக ஓரிடத்தில் அமர்ந்து மூலமூர்த்தியைத் தியானிக்க வேண்டும் கண்களை இறுக மூடிக்கொண்டு இறைசிந்தனையில் லயித்த வண்ணம் ஆனந்த பரவசத்தில் மூழ்கித் திளைக்கவேண்டும். இதை இங்கு மட்டுமே பெறமுடியும். இறுதியாகச் சண்டேஸ்வரரைத் தரிசித்து தோத்திரஞ்செய்து வணங்கி மூன்று முறை கைகளைக் கொட்டி சிவதரிசன பலனைத் தரும்வண்ணம் கேட்டுக்கொள்ளவேண்டும்.


பின்பு வலப்பக்கமாக வந்து நந்தியின் கொம்புகளுக்கு நடுவாகப் பார்த்து வணங்கிப் பலிபீடத்துக்கு இப்பால் மும்முறைவணக்கஞ்செய்து எழுந்து சிவத்தியானஞ்செய்து திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் வீட்டுக்குச் செல்லுதல்வேண்டும். ஆலய தரிசனம் மன நிம்மதியைத் தரும் அது மட்டுமன்றி ஆலய வழிபாட்டுக்கு கோயில் சென்று நாம் வீண்வார்த்தைகளைப் பேசிப் பாவத்தைத் தேடிக்கொள்ளக் கூடாது இது குளிக்கப்போய்ச் சேறு பூசியதாக முடிந்துவிடும்..

– சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.

# அமெரிக்க படைகளின் எண்ணிக்கை பாகிஸ்தானில் குறைக்கப்படுகிறது

(வாசிங்டன்)

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க படைகள் படிப்படியாக குறைக்கும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக பென்டகனின் செய்திதொடர்பாளர் தெரிவித்துள்ளார். படைகளை குறைக்க வலியுறுத்தி பாகிஸ்தான் அரசு அமெரிக்காவிற்கு எழுதிய கடிதத்தில் கேட்டுகொண்டது. இதனையடுத்து படைகளை குறைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாக பென்டகன்செய்தி தொடர்பாளர் கலோனல் டேவ் லாபன் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் சுமார் 200க்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவத்தினர் தங்கியுள்ளனர். பாகிஸ்தான் அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்நாட்டு இராணுவ வீரர்களுக்கான பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை அமெரிக்க இராணுவ வீரர்கள் உதவி புரிந்து வந்ததாக அவர் தெரிவித்தார்



பாகிஸ்தானின் பெஷாவர் நகரிலிருந்த பொலிஸ் நிலையம் தலிபான்கள் நடத்திய தற்கொலைத்தாக்குதலில் பொலிஸ் நிலையம் இடிந்து வீழ்ந்துள்ளதைக் காணலாம் இந்தத் தாக்குதலில் 7 பொலிஸார் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்தனர்.

## உலகச் செய்திகள்

# நேட்டோ ஹெலி ஆப்கானில் விபத்து

(காபூல்)

ஆப்கானில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த நேட்டோ படைகளின் சொப்பத் ஹெலிகொப்டர் விபத்துக் குள்ளானதாக நேட்டோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானின் மேற்கு மாகாணத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றதாகவும், இந்த விபத தில் விமான ஓட்டிகள் எவரும் காயமடையவில்லையெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரும், விமான ஓட்டிகளும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அதிகாரிகள் விபத்துக்கான காரணத்தை தெரிவிக்க மறுத்துவிட்டனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி ஆப்கானின் கிழக்குப் பகுதியில் நேட்டோ படையினரின் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் விமானி ஒருவர் உயிரிழந்து மற்றொருவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# எங்களைத் தோற்கடித்த ராஜபக்ஷ மீது தாங்க முடியாத கோபத்தில் இருக்கிறோம்

**கனடாவில் இருந்து வெளிவரும் தாயகம் இதழில் ஜோர்ஜ் குருசேவ் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.**



யாழ்ப்பாணத்தில் சில நிகழ்வுகளைக் கண்டிருப்பீர்கள். இளவட்டங்கள் சில நேரங்களில் பெண் பிள்ளைகளோடு சொறிச் சேட்டைகளில் ஈடுபடுவார்கள். ஒருதலைக் காதல் சேட்டைகள். சில நேரங்களில் விசயம் தெரியாமல் பெண்ணின் அண்ணன்மாரிடமோ. அல்லது அந்தத் தெருவில் உள்ள மற்ற போட்டிக் காதலர்களிடமோ மாட்டிக் கொண்டு அடி வாங்குவார்கள். அதிலும் மிகவும் அவமானமானது, அந்தப் பெண்ணின் முன்னால் அடி வாங்குவது.

அடி வாங்கியவருக்கு உலகத்தில் இல்லாத கோபம் வரும். பெண்ணின் முன்னால் அடி வாங்கிய அவமானம். பழி வாங்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருப்பார். திருப்பி அடிக்க தனக்கு திராணி இருக்காது. யாரையாவது பிடித்து பழிவாங்க வேண்டும் என்று அலைவார். இத்தனைக்கும் இப்படி தேவையில்லாமல் அந்தப் பெண்ணோடு சொறிச் சேட்டை விட்டது தன்னுடைய பிழை என்பதை இவர் ஒருபோதுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்.

இன்றைக்கு தமிழர்களின் ராஜபக்ச மீதான மனநிலையும் இவ்வாறானது தான். எங்களை அவமானப்படுத்தி விட்டான். அவனைப் பழிக்குப் பழி வாங்காமல் விடக் கூடாது. எந்தச் சண்டியனைப் பிடித்து என்றாலும் பதிலடி கொடுக்க வேண்டும் என்று தான் இன்றைக்கு பலரும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது கிட்டத்தட்ட obsession என்ற நிலைக்கு வந்து விட்டது. யுத்தக் குற்றவாளியாக நிறுத்த வேண்டும் என்பது முதல் தமிழ் எழுத்தாளர் மாநாட்டைக் குழப்ப வேண்டும் என்பது வரைக்கும் நாங்கள் முறுகிக் கொண்டு நிற்கிறோம்.

இலக்கிய நண்பர்கள் வாசித்திருப்பார்கள். சுந்தர ராமசாமியின் ஜே.ஜே சில குறிப்புகள். இதில் ஜே.ஜே ஒரு இலக்கியப் பிரகிருதி பற்றிச் சொல்வான்... அவனுடைய நிலைப்பாட்டை அவனது எதிரிகளே தீர்மானிக்கிறார்கள் என்று. அதாவது அவனுக்கு என்று சொந்தமான நிலைப்பாடு எதுவும் இல்லை. அவனது எதிரிகள் எடுக்கும் நிலைப்பாடு எல்லாவற்றுக்கும் எதிரான நிலைப்பாட்டைத் தான் இவன் எடுப்பான் என்று.

இந்த obsession இன்று எந்த அளவில் வந்து நிற்கிறது? எங்களுடைய அரசியலை இவ்வளவு நாளும் பிரபாகரன் நிர்ணயித்து வந்தது போய், இப்போது மகிந்த தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

சரத் பொன்சேகாவை ஒரு விடுதலை வீரனாகச் சித்தரித்து, அவரது மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து நாங்கள் கண்ணீர் விடுவதில் வந்து நிற்கிறது. பிரபாகரனைக் கொன்றது நான் தான், ராஜபக்ச அல்ல என்று சிங்கள இனவாதிகளின் வாக்குகளை எடுப்பதற்காக சொன்ன ஒருவரை, தமிழர்கள் சம உரிமை கேட்கத் தகுதியில்லாதவர்கள் என்று கருத்துச் சொன்ன ஒருவரை, எங்கள் எதிரி மீதான கோபம் காரணமாக, எதிரிக்கு எதிரி நண்பன் என்றும் முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும் என்று சாக்குப் போக்குச் சொல்லிக் கொண்டு ஜனாதிபதியாக்க முயற்சித்தோம்.

எங்களுக்கு அடித்து விட்டான் என்று நாங்கள் பழி வாங்க கூலிக்கு அழைக்கும் சண்டியன் எங்களிடம் தொடர்ந்து கப்பம் கேட்பான் என்ற உண்மை எங்களுக்குத் தெரியாத படிக்கு எதிரி மீதான கோபம் கண்ணை மறைத்து விட்டது.

ராஜபக்ச ஒன்றும் புனிதர் இல்லை. ஆனால் ராஜபக்ச மீது மட்டும் கோபம் கொள்வதன் காரணம் என்ன?

ராஜபக்ஷவை யதார்த்தவாதி என்று பகர்ந்தது யார்? எழுபது கோடி ரூபா வாங்கி தமிழர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது யார்? இவர்கள் சொல்லலாம், தாங்கள் பணம் வாங்கியதாக புலிகள் சொல்லவில்லையே என்று சப்பைக்கட்டு கட்டலாம். கீழ் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது உண்மை என்று தமிழ்ச்செல்வனே ஒப்புக் கொண்டிருந்தார்.

ரணிலை விட, மகிந்த ஒரு லட்சத்து எண்பதாயிரம் வாக்குகளால் மட்டுமே வென்றார். யாழ்ப்பாணத்தில் வாக்களிக்க விட்டிருந்தால் ரணில் ஜனாதிபதியாகி இருப்பார் என்பது தெரிந்த உண்மை. எனவே, மகிந்த ஜனாதிபதியானதற்கு காரணம், புலிகளே. புலிகள் மட்டுமே. புலிகளின் உதவி இல்லாமல் மகிந்த பதவிக்கு வந்திருக்கவே முடியாது. புலிகளுக்கும் மகிந்தவுக்கும் இடையில் ஒப்பந்தம் இருந்தது. எனவே தேசியத் தலைவர் யதார்த்தவாதி என்று மதித்த ஒருவர் மீது இவர்கள் கோபம் கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

நீங்கள் சொல்லலாம். ஒப்பந்தம் இருந்தது உண்மை. எங்கள் வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றினோம். மகிந்த தான் வாக்குறுதியை மீறித் துரோகம் இழைத்து விட்டார் என்று.

புலிகள் ஒப்பந்தம் செய்த ஒவ்வொருவரையும் என்ன செய்தார்கள் என்ற வரலாறு எங்கள் கண் முன்னே நிற்கிறது. இந்தியாவோடு புரிந்துணர்வோடு இருந்தார்கள். பிரேமதாசாவோடு புரிந்துணர்வுடன் இருந்தார்கள். சந்திரிகாவோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் அவர்களைக் கொலை செய்த விவகாரங்கள் மகிந்தவுக்கு தெரிந்திருக்காதா?

புலிகள் எந்தக் காலத்தில் செய்த ஒப்பந்தங்களுக்கு உண்மையாக இருந்தார்கள்? நோர்வேயில் சமஷ்டிக்கு சம்மதம் என்று கையெழுத்து வைத்து விட்டு வந்து ரணிலின் காலை வாரியதில் இருந்து தானே புலிகளின் அழிவு ஆரம்பிக்கிறது.

மகிந்தவை ஆட்சிக்கட்டிலில் ஏற்றிய பெருமை புலிகளைச் சாருகிறது. சிங்கள இனவாதிகளை நம்பக் கூடாது என்று, அரசுடன் தொடர்பு கொண்ட சகலரையும் துரோகிகள் என்று முத்திரை குத்தி மண்டையில் போட்ட புலிகள் என்ன நம்பிக்கையுடன் மகிந்தவை நம்பினார்கள்? மகிந்த என்ன ரணில் போல பச்சோந்தி வேடமா போட்டார்? சிங்கள இனவாதிகளின் ஆதரவுக்காக என்று பகிரங்கமாகத் தானே அரசியல் நடத்தினார். தமிழருக்குப் பிரச்சனை இல்லை என்று தீர்வு கிடைப்பதைச் சகல வழிகளிலும் தடுத்த ஜே.வி.பி. ஹெல உறுமயவுடன் தானே கூட்டு வைத்தார்? பிறகு கோபம் கொள்வதற்கு என்ன இருக்கிறது?

மகிந்தவை தேசியத் தலைவர் யதார்த்தவாதி என்ற போது, 'மகிந்த ஒரு இனவாதி, இனவாதியை நம்பி அரசியல் நடத்துவது ஆபத்தில் முடியும்' என்று எந்த ஆய்வாளர், எந்த ஊடகவியலாளர் தலைவருக்குப் புத்திமதி சொன்னார்?

தவறு மற்றவர்களில் அல்ல. உங்களிடம் இருக்கிறது. உங்கள் நுனி விரலில் தான் நோ இருக்கிறது.

புலிகள் விட்ட தவறை மறைத்து, மகிந்தவை எப்படியாவது அவமானப் படுத்தியே ஆக வேண்டும் என்ற வெறியில் எங்கள் இனத்தின் எதிர்காலத்தை சிந்திக்க மறந்து விடுகிறோம். இன்றைக்கும் தமிழ் ஊடகங்கள்.. பத்திரிகைகள், வானொலிகள், இணையத்தளங்கள்... இலங்கையில் தமிழ் மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களைச் செய்யத் தொடங்கி கால் ஊன்றத் தொடங்குகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றன. இன்றைக்கும் வெள்ளைவான் கடத்தல், கற்பழிப்பு என்று கதை விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே போய் வந்தவர்கள் எல்லாம் அங்கே மக்கள் நிம்மதிப் பெருமூச்சுடன் இருக்கிறார்கள் என்று சொன்னாலும் நம்புகிறார்கள் இல்லை.

மனித உரிமை மீறல்கள்... அது பெண்கள் மீதான வன்முறையாக இருந்தால் என்ன? தங்கள் வாழிடங்களில் வாழ முடியாமல் தடுத்து நிறுத்தப்படுவதாக இருந்தால் என்ன? குற்றம் சாட்டும் போது, ஆதாரங்களுடன் வெளியிடும் போது தான் அதற்கு வலிமை இருக்கும். அது குறித்து மேலதிகமாக நடவடிக்கைகள் குறித்து சிந்திக்க முடியும். புலன் பெயர்ந்த தமிழர்களைக் குஷிப்படுத்துவதற்காக, தமிழக அரசியல்வாதிகள் பாணியில்... அங்கே தமிழ்ப் பெண்களின் மார்பகங்கள் அறுக்கப்படுகின்றன என்று உணர்ச்சிப் பேச்சுப் பேசுவதால் எந்தப் பயனும் இல்லை.

சரி, கற்பழிப்பு, கொடுமை என்கிறீர்கள். உங்களில் யார் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகத்துடன் இங்கே தொடர்பு கொண்டு, அங்கே இன்னாருக்கு இன்ன நடந்தது, இது குறித்து ஆவணப்படுத்துங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள்? உங்கள் நோக்கம் எல்லாம் இந்த தமிழ்ப் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டு இந்த புலன் பெயர்ந்த கூட்டத்தைக் குஷிப்படுத்தி காசு பண்ணுவது மட்டும் தான்.

எங்கள் எதிரி மீதான obsession எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பதற்காக எங்கள் மூக்கை நாங்களே அறுத்துக் கொள்ள வைக்கிறது. அகதி முகாம்களை வதை முகாம்கள் என்றோம்... ஹிட்லரின் concentration camp வதை முகாம்களோடு ஒப்பிட்டு, அவர்கள் எல்லாம் விசவாயு அடித்துக் கொல்லப் படுவதற்காக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று.

கனடாவிலும் அமெரிக்காவிலும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜப்பானியர்கள், ஜெர்மானியர்கள், இத்தாலியர்கள், உக்ரேனியர்கள் என நேசநாடுகளுடன் எதிர்த்துப் போரிட்ட நாடுகளின் வம்சாவளியினர் internment camps எனப்படும் முகாம்களில் உளவுக்குற்றச்சாட்டிலும் ஆதரவு வழங்கிய சந்தேகத்திலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். சூழலியல் விஞ்ஞானி டேவிட் சுசுகி கூட இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர் தான். இந்த வாரம் கூட 'ரொறன்ரோ ஸ்டா'ரில் இத்தாலியர்கள் கனடாவில் இவ்வாறு அடைக்கப்பட்டிருந்ததை ஆவணப்படுத்துவதற்கு மத்திய அரசு தடுத்து வைக்கப்பட்டிருந்த இத்தாலியர்களிடம் விபரம் கேட்டிருக்கிறது.

இப்படியான தடை முகாம்களை இனப்படுகொலை செய்வதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஹிட்லரின் வதை முகாம்கள் என்று நாங்கள்... ஓநாய் வருகிறது என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தோம். யாருமே கணக்கெடுக்கவில்லை.

இந்த முகாம்களில் விபசாரம் நடக்கிறது என்று வாய் கூசாமல் அன்று அபலைகளாக வந்திருந்த எல்லாப் பெண்கள் மீதும் விபசார முத்திரை குத்தினோம். எங்களுக்கு எங்கள் மூக்கு போனது பிரச்சனையில்லை, எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என்பது முக்கியம்.

வை.கோ, சீமான் சொல்லும் 'தமிழ்ப் பெண்கள் கதறக் கதற கற்பழிக்கப்படுகிறார்கள், தமிழ்த் தாய்மாரின் மார்பகங்கள் அறுக்கப்படுகின்றன' என்பதெல்லாம் இனஅழிப்பு விசாரணையில் சாட்சியமாகப் பயன்படுத்த முடியாது. யுத்தக்குற்றத்திற்கான ஆதாரங்களைத் தேட நீங்கள் எங்கே ஒற்றுமையாக இருக்கிறீர்கள்? நீங்கள் ஆளை ஆள் துரோகி என்று புலிகளின் சொத்துக்களைக் கைவசப்படுத்த சண்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

Genocide என்று கூச்சல் போட்ட நாங்கள் தான் முஸ்லிம்களை வெளியேற்றி ethnic cleansing செய்ததை எந்த முகத்தோடு நியாயப்படுத்தப் போகிறோம்?

வெள்ளைக் கொடியோடு வந்த புலிகளின் தலைவர்களை படுகொலை செய்தது பற்றி நாங்கள் குமுறுகிறோம். சரணடைந்தவர்களைக் கொல்வது யுத்தக் குற்றம் தான். ஆனால் இதே புலிகள் தான் மக்கள் வெள்ளைக் கொடிகளோடு தப்பிச் செல்லும்போது சுட்டு விட்டு இராணுவம் சுட்டது என்று வெளிநாட்டில் செய்தி வெளியிட்டார்கள் என்ற உண்மையை மறந்து விடுகிறோம்.

மக்கள் போக விரும்பவில்லை. புலிகளோடேயே இருக்க விரும்புகிறார்கள் என்று சொன்ன நடேசன், எந்த முகத்தோடு வெள்ளைக் கொடியைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய உயிரைக் காப்பாற்ற எதிரியிடம் சரணடைந்தார் என்ற கேள்வியை இன்று வரைக்கும் கேட்க ஒருவரும் தயாராயில்லை. காரணம், பொட்டுக் கேடுகள் வெளியில் வந்து விடும் என்ற பயம்.

யுத்தக்குற்றச்சாட்டுக்கள் பற்றிச் சொல்வோர் ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள மறந்து விடுகிறார்கள். ஐ.நாவோ, சர்வதேச சமூகமோ நாங்கள் கேட்பது போல, மகிந்தவை மட்டும் விசாரணைக்குட்படுத்தாது. இந்தக் கோரிக்கை double நனபநன sword என்பது போல. எங்களையும் வெட்டித் துண்டாடும்.

ஆரம்பத்திலிருந்தே ஐ.நாவும் மற்ற சர்வதேச அமைப்புகளும் புலிகள் மீதும் யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே கூறி வருகின்றன. அவ்வாறான

நிலை வரும் போது, அரசு என்ன செய்யும்? தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் கே.பி தொடக்கம் புலிகளின் இடைமட்டத் தலைவர்களைப் பயன்படுத்தி, புலிகளின் யுத்தக் குற்றங்களை அம்பலப்படுத்தும். அதற்கு நாங்கள் தயாரா?

நாங்கள் தான் எதிரியின் சகுனம் பிழைக்க எங்கள் மூக்கை அறுக்கும் பழக்கமுடையவர்கள். எதிரியை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் அதற்கும் நாங்கள் தயாராக இருப்போம்.

# இனப்படுகொலை புரிந்த குற்றம்; செர்பிய இராணுவத் தளபதி கைது



(சேர்பியா)

இனப்படுகொலை தொடர்பான குற்றச் சாட்டுக்களுக்குள்ளாகி 15 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த முன்னாள் பொஸ்னிய செர்பிய இராணுவத் தளபதி ராட்கே மிலாடிச் கைது செய்யப்பட்டுள்ளார்.

செர்பியாவின் வடக்கேயுள்ள ஒரு கிராமத்திலிருந்து நேற்று வியாழக்கிழமை காலை அவர் கைது செய்யப்பட்டதாக செர்பிய அதி பர் போரிஸ் டாடிக் தெரிவித்துள்ளார்.

போலி அடையாள ஆவணங்களுடன் அவர் தனது உறவினருக்கு சொந்தமான சிதிலமடைந்த வீட்டில் வசித்து வந்துள்ளார். அவர் கைது செய்யப்படும் போது எதிர்ப்புக் காட்டவில்லை என்று செர்பிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த முறை அவர் பொதுமக்கள் மத்தியில் தென்பட்டபோது இருந்த தோற்றத்துடன் ஒப்பிடுகையில் இப்போது அவர் மிகவும் வயதானவராக தோன்றுகிறார்.

இந்தக் கைதானது செர்பிய வரலாற்றின் ஒரு அத்தியாயத்தை முடிவுக்கு கொண்டு வந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அந்நாட்டு அதிபர் டாடிக், அதே நேரம் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடாகச் சேர்ந்து புதிய அத்தியாயத்தை துவக்க இந்த கைது வழிவகுக்கும் என்றும் கூறியுள்ளார். சிரபெரநிட்சா இனப்படுகொலை உள்ளிட்ட பொஸ்னிய போர்க் குற்றம் தொடர்பாக ஜெனரல் மிலாடிச் குற்றத்தை எதிர்கொண்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள ஜெனரல் மிலாடிச், பெல்கிரேடில் உள்ள ஒரு நீதிபதி முன்பு ஆஜர் படுத்தப்படுவார். அதே நேரம் அவரை தி ஹேக்கில் இருக்கும் சர்வதேச போர் குற்ற தீர்பாயத்திற்கு கொண்டு வரவும் ஏற்பாடுகள் நடக்கின்றன.

தான் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக ஜெனரல் மிலடிச் முறையீடு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செப்ரநிட்சா என்ற இடத்தில் இவரின் தலைமையின் கீழ் செயல்பட்ட படையினர் 8500 முஸ்லிம்களை கொன்றனர் என்பதுதான் இவர் மீதான அடிப்படைக் குற்றச் சாட்டு.

செர்பியத் தலைவர் ஸ்லோபோதான் மிலாசவிச் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்ட 2000ஆவது ஆண்டு வரை மிலாடிச் பெல்கிரேடில் வெளிப்படையாகவே வாழ்ந்து வந்தார். இவரின் கைதை பல உலகத் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

# கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு குழு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்துக் கட்டி அவற்றைப் பராமரித்து உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காக குழுவொன்றைத் தெரிவு செய்யும் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் நடைபெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தனங்கிளப்பு ஜே/299, ஜே/298, ஜே/297 ஆகிய கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குறித்த கிராம அலுவலர் பிரிவுகளிலேயே அதிக கட்டாக் காலி மாடுகள் நடமாடுவதைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் குழுக்களை அமைப்பது குறித்துத் தீர்மானிக்கப்பட்டது. புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

க.கந்தையா தலைவராகவும், கு.தவபாலன் செயலாளராகவும், திருச்செல்வம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன், தனங்கிளப்பு பகுதியிலிருந்து ஜெயகுலராசா, விக்னேஸ்வரன், நகுலேஸ்வரன், சண்முகம் ஆகிய 4 பேர் கொண்ட குழுவும் கைதடி-நாவற்குழிப் பிரதேசம் உள்ளடங்கலாக மறவன்புலோ பகுதியிலிருந்து முரளி கந்தையா, யோகநாதன், தவபாலன் ஆகியோர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இக்குழுவினர் தங்களது பிரதேசங்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளைப் பிடித்துக் கட்டி அவற்றைப் பராமரித்து மாடுகளிலுள்ள அடையாளங்களைக் கொண்டு அவற்றை உரியவர்களிடம் ஒப்படைப்பது மற்றும் வறியவர்கள் பராமரிக்கக் கூடியவர்களிடம் ஏனைய மாடுகளைக் கொடுப்பது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மிருக வைத்தியர், கமநல சேவைத் திணைக்கள உத்தியோகத்தர், ஈ.பி.டி.பி தென்மராட்சிப் பொறுப்பாளர் சாள்ஸ் மற்றும் ஈ.பி.டி.பி கட்சியின் பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (19)

# 38 ஆயிரம் பேருக்கு...

உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், வடக்கின் வசந்தம் கடன் திட்டத்தில் கீழ் 14 ஆயிரம் பேருக்கு 1900 மில்லியன் ரூபாவும், கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 19 ஆயிரம் பேருக்கு 1500 மில்லியன் ரூபாவும் இதுவரை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது 16 வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. இந்த வங்கிகளின் 24 கிளைகளும், 20 விரிவாக்கல் நிலையங்களும் செயலாற்றுகின்றன

இக்கருத்தரங்கில், இலங்கை வங்கியின் சுன்னாகக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் பொ.பாலகுமார், மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், ஹட்டன் நஷனல் வங்கியின் சங்கானைக் கிளையின் முகாமையாளர் ம.தயாபரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

# ஆஸியின் அகதி...

நடைபெற்ற ஊடகவியலாளர் மகாநாடொன்றில் கருத்து வெளியிடும்போதே ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அவுஸ்திரேலியா கடைப் பிடிக்கும் தடுப்பு முகாம்கள் தொடர்பான கொள்கைகளின் மூலம் அவுஸ்திரேலியாவின் மனித உரிமைகள் தொடர்பான நிலைமைகளை நாம் ஓரளவுக்கு ஊகிக்கக் கூடியதாகவுள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் மட்டுமன்றி சிறுவர்களும் கூட அவுஸ்திரேலியாவின் முகாம்களில் வருடக் கணக்கில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

எந்தவித குற்றங்களும் செய்திராத நிலையில் அவர்களை வருடக்கணக்கில் அடைத்து வைத்திருப்பது சர்வதேச சட்டங்களுக்கு முரணானதாகும். அதன் காரணமாகவே அவர்களில் பலர் தடுப்பு முகாம்களுக்குள் தற்கொலை செய்து கொள்ள முயல்கின்றனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பற்தூரிகைகளுக்கு இனி தரச்சான்றிதழ்

(கொழும்பு)

பற்பசை மற்றும் பற்தூரிகை என்பவற்றை விற்பனை செய்வதற்கு தரச் சான்றிதழ் அவசியம் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கான வர்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப் படிருப்பதாகவும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூம் மர்சூக் தெரிவித்துள்ளார்.

# ஈட்டி எறிதலில் சாதனை

(கொழும்பு)

ஈட்டி எறிதல் போட்டியில் நேற்று முன்தினம் புதிய தேசிய சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த டபிள்யூ.எல்.தயாரட்ண 75.41 மீற்றர் தூரம் எறிந்து இச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான தேர்வுப் போட்டியின்போதே அவர் இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

# பிலிப்பு நேரியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

போர் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த செம்பியன் பற்று கிராம மக்கள் கடந்த ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் மீள் குடியேறியுள்ளனர். தங்களுடைய பாதுகாவலரான புனித பிலிப்பு நேரியாரின் திருவிழாவை நேற்று வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இத்திருவிழாத் திருப்பலி செம்பியன்பற்றின் மைந்தன் அருட்பணி சில்வெஸ்ரர் தாஸ் (அ.ம.தி) அடிகளார் தனது சொந்த மண்ணின் முதற்திருப் பலியாகவும், அருட்பணி அன்ரனிதாஸ் (பொருளாளர், யாழ்.மறை மாவட்டம்), கிளிநொச்சி மறைக் கோட்ட குருமுதல்வர் அருட்பணி யாவிஸ், பருத்தித்துறை மறைக் கோட்ட குருமுதல்வர் அருட்பணி ஜோன் மௌலிஸ் ஆகியோர் இணைந்து நடாத்திய கூட்டுத் திருப்பலியாகவும் இடம்பெற்றது.

15இற்கும் மேற்பட்ட குருக்கள் பங்குபற்றினர். மீள் குடியேற்றத்தின் பின் நடைபெறுகின்ற முதல் திருவிழாவாக இருந்தமையால், மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்குபற்றினர். மற்றும் சுனாமியால் இறந்த கிராமத்து மக்களையும் நினைவு கூர்ந்தனர். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும், விருந்து வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

# போதையில் வாகனம் செலுத்திய பௌத்த பிக்கு கைது

(கொழும்பு)

மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திய பௌத்த மத குரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குருநாகல் பிரதேசத்தில் பொலந்தாபிட்டிய என்ற இடத்தில் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டபோது இவர் பிடிபட்டுள்ளார். பௌத்த பிக்கு தனது காவியுடை வெளியே தெரியாதபடி சிவப்பு நிற மேல் அங்கி அணிந்திருந்துள்ளார்.

அத்தோடு அவர் வாகனம் செலுத்திய விதம் பொலிஸாரைச் சந்தேகப்பட வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சோதனைக்காக அவரை இறக்கியவேளை, தனது மேலாடை விலகாமல் இருப்பதிலேயே கவனத்தை அவர் செலுத்தியதாகவும், இதனால் மேலும் சந்தேகங்கள் எழுந்தால் பொலிஸார் அவரைத் துருவி விசாரித்ததாகவும் அறியப்படுகிறது.

# கப்பல் சேவை ஒத்திவைப்பு

கொழும்பிற்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான கப்பல் சேவை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை இன்றையதினம ஆரம்பிக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஜூன் மாதம் முதல் வாரத்தில் இந்த சேவை ஆரம்பிக்கப்படும் என கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் கலைப்பீடாதிபதியும், மெய்யியற் பேராசிரியருமான அமரர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவின் முதலாவது நினைவுப் பேருரை வரும் திங்கட்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். 'பல்வகைகள் ஒன்று சேர்தல்' என்ற தலைப்பில் கலாநிதி சி. மௌனகுரு பேருரையை ஆற்றுவார்.

# தங்கம் கடத்தல் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு தங்கம் கொண்டு வந்த பயணிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து ஒவ்வொன்றும் 100 கிராம் எடைகொண்ட 16 தங்கக்கட்டிகளை விமான நிலைய சுங்கத்திணைக்கள புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்திய கடவுச்சீட்டை வைத்திருந்த தர்மர் சமுத்திரம் என்பவரை சுங்க பரிசோதனை நிலையத்தில் தங்கத்திலான பொருட்களை வைத்துள்ளீர்களாவென்று கேட்டபோது அதற்கு அவர் சரியாக பதிலளிக்கவில்லை. பின்னர் அவரது மலக்குடலிலிருந்து 10 தங்கக் கட்டிகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை, இந்திய கடவுச்சீட்டை வைத்திருந்த முத்தையா ஆசைத்தம்பி என்னும் மற்றுமொரு நபரது மலக்குடலிலிருந்தும் 06 தங்கக்கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.



# இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏகப்பிரதிநிதி எவருமில்லை

## பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா



(கொழும்பு)

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியாக அரசாங்கம் எவரையும் ஏற்றுக்கொள்ளவில்லை என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது:

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கம் முன்னுரிமை வழங்கி செயற்பட்டு வருகின்றது. வடக்கு - கிழக்குப் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன. தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது. ஆனால எவரையும் அரசாங்கம் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளவில்லை.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் அறவிடப்பட்ட பெருந்தொகைப் பணம் தமிழ் மக்களின் நலனுக்காக செலவிடப்படவில்லை. அழிவை ஏற்படுத்தும் யுத்தத் தளவாடங்கள் கொள்வனவுக்கே அவை பயன்படுத்தப்பட்டன. யுத்தம் முடிந்த பின்னரும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடம் நிதி அறவிடும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனாலும் தமிழ் மக்கள் நன்மையடையப்போவதில்லை என்றும் அமைச்சர் கூறினார்.


# விசேட கண்காணிப்பில் பாடகர் எஸ்.பி.பி.

(கொழும்பு)

இலங்கைப் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்படுவோர் பட்டியலில் தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களில் ஒருவரான எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் இருந்து வருகின்றார் என்று தெரிகின்றது. இவர் புலிகள் இயக்கத்தின் "எல்லாளன்" திரைப்படத்துக்காகப் பாடியிருக்கின்றார்.

கரும்புலிகளால் அனுராதபுரம் விமானத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சித்திரிக்கும் முழுநீள திரைப்படம் "எல்லாளன்" படத்தின் எழுத்தோட்டத்தில் பாடியவர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் என்று இவரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. படத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் பாடல் வரிகளும், இவரின் குரலும தமிழ் இளைஞர்களை உசுப்பேற்றும் வகையில் உள்ளன என்று புலனாய்வுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பரசிற்றமோல் மாத்திரைகளால் ஆபத்து; எச்சரிக்கின்றனர் மருத்துவர்கள்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள தேசிய வைத்தியசாலைகள் மேற்கொண்ட ஆய்வின்படி பரசிற்றமோல் மாத்திரைகளின் பாவனை அதிகரிப்புக்காரணமாக அது நஞ்சுத் தன்மையாக மாறிவருவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மருத்துவர் பிரியதர்ஷினி கலப்பதி ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில்;

பரசிற்றமோல் நஞ்சாகுதல் காரணமாக தினமும் இருவர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தி தொண்ணூறு வீதமான தற்கொலை முயற்சிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

பரசிற்றமோல் மாத்திரைகள் சாதாரண தலைவலி மற்றும் நோ என்பவற்றிலிருந்து நிவாரணம் பெறுவதற்காகவே பயன் படுத்தப்படுகின்றன. ஆனால் பாவனை அளவு அதிகரிக்கும்போது அவை நஞ்சாகின்றன. இது கடந்த 2000 ஆம் ஆண்டின் பின்னரே அதிகரித்துக் காணப்படுகின்றன.

எனவே இந்த விடயம் தொடாபாக ஊடகங்கள் கூடுதல் கவனம் செலுத்தி இதன் ஆபத்துக் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வு அடைவதற்கு கூடுதல் பங்களிப்பு ஆற்றவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

மற்றொரு வைத்தியரான ஹிரி முத்துகொட இது குறித்து தெரிவிக்கையில், வைத்தியர்களும், நோயாளிகளும் கலந்துரையாடும் நேரங்களில் இது குறித்த தெளிவு ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

# கழிவு நீரைப் பயன்படுத்தி சிறுபோக நெற்செய்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி - கண்டாவளை ஆற்றுக்கான அணைக்கட்டு கட்டப்பட்டு கழிவு நீரைப் பயன்படுத்தி 400 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இரணைமடுக் குளத்திலிருந்து அதிகளவு கழிவு நீரைக் கொண்டு செல்லும் இவ் ஆற்றிணை மறித்துப் புதிதாக அணைக்கட்டு கட்டப்பட்டு கடந்த மாதம் 1200 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்வதற்காக இருந்த போதிலும், 800 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டு இவ் ஆற்றிற்கான அணைக்கட்டு ஒரு இலட்சம் ரூபா செலவில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் கட்டப்பட்டது. இதன் பின்னர் அணைக்கட்டினைவிட தண்ணீர் அதிகளவில் காணப்பட்டதை அடுத்து இவ் அணைக்கட்டு வெட்டப்பட்டு தற்போது மீளவும் கட்டப்பட்டு ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் வீதம் 400 ஏக்கர் நிலப் பரப்பில் செய்கையை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் தற்போது செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# டெங்குக் கட்டுப்பாடு கொழும்பில் தீவிரம்

(கொழும்பு)

நுளம்பு பெருகும் இடங்களுக்கு பி.ரி.ஐ. மருந்தை தெளிக்கும்படி சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் டாக்டர் சரத் தெனியகேவிற்கு நேற்று அறிவுறுத்தியுள்ளார்.

குப்பை கொட்டும் இடங்களில் வெற்றுப் போத்தல்கள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள் பல்லாயிரக்கணக்கில் காணப்படும் அதேவேளை, வீடுகளில் நுளம்பு பெருகும் முக்கிய இடமாக பீலிகள் காணப்படுவதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிக அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட இடங்களான நாரஹென்பிட்டிய, ஹவ்லொக் ரவுண், திம்பிரிகஸ்யாய ஆகிய இடங்களில், இலங்கையில் தயாரிக்கப்பட்ட பி.ரி.ஐ. மருந்து விசிறப்படுமென டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

இன்று வரையில் 6035 டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் டெங்கினால் 49 மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அரசாங்க நோய் பரம்பலியல் அலகில் உள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

# வேகமாக அதிகரிக்கும் நாய்களின் எண்ணிக்கை



நாடு முழுவதும் நாய்களின் விகிதம் 2.5 மில்லியனைக் கடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் கட்டாக்காலி நாய்களின் வீதமும் அதிகரித்துக் காணப்படுகிறது. கட்டாக்காலி நாயகளைப் பராமரிக்கவென அநுராதபுரத்தில் திறந்வெளி இல்லம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

2 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள இந்த திறந்த வெளி இல்லத்தில், வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த கட்டாக்காலி நாய்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு வருடத்தில் சாதாரண நாய்க்கடி தடுப்பூசிக்கு 500 மில்லியன் ரூபாவும், கட்டாக்காலி நாய் தடுப்பூசிக்கு 200 மில்லியன் ரூபாவும் செலவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு மே மாதம் 10பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி உயிரிழந்ததுடன், அதே காலப் பகுதியில் 20 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த வருடம் 20,000 நாய்களுக்கு கற்பத்தடை ஊசி போடப்பட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# இடி மின்னல் தாக்கம்; மாணவர்கள் 17 பேர் பாதிப்பு

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் பெந்தோட்டையிலுள்ள பாடசாலையொன்றின் கட்டடத்தை மின்னல் தாக்கியபோது குறைந்தபட்சம் 17 மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

பெந்தோட்டை - எலகத்தா மகாவித்தியாலயத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு பிள்ளைகள் வகுப்பறையிலிருந்தபோது மின்னல் தாக்கியது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் களுத்துறை - நாகொட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பாடசாலையின் மின் சுற்றுக்கள் அழிந்துபோனதாக காலி மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ மையத்தின் இணைப்பாளர் கேணல் ரணசிங்க கூறினார். மாணவர்கள் அதிர்ச்சிக்குள்ளானபோதிலும் அவர்களில் எவருக்கும் காயம் ஏற்படவில்லையென அவர் கூறினார்.

# இலங்கைக்கான வீசா இணையம் மூலம் பெறலாம்

(கொழும்பு)

இணையத்தளம் ஊடாக வெளிநாட்டவர்களுக்கு இலங்கைக்கான வீசா வழங்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார்.

வெளிநாட்டுப் பிரஜைகள் இணையத்தின் ஊடாக நேரடியாக வீசா பெற்றுக்கொள்ளும் யோசனைத் திட்டமொன்றை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் கடந்த ஜனவரி தொடக்கமே முன் வைத்திருந்தது. ஆயினும் அதற்கான அனுமதி தற்போதுதான் கிடைக்கப் பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் இனிவரும் காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்யும் மற்றும் இலங்கையின் ஊடாக பயணங்களை மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பிரஜைகள் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் இணைய தளத்தின் ஊடாக அதற்கான வீசாக் களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இணைய வசதி அற்றவர்கள் வெளிநாடுகளுக்கான இலங்கைத் தூதரகங்கள் மற்றும் பயண முகவர்களின் ஊடாக வழமையான நடைமுறைகளின் பிரகாரம் தமக்கான வீசாவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிரத நிலையம் ஓமந்தையில் திறப்பு

ஓமந்தையில் இன்று புதிய புகையிரத நிலையம் ஆரம்பித்து வைக்கப்படுவதுடன், யாழ்.தேவி புகையிரதத்தின் சேவைகள் ஓமந்தை வரை விஸ்தரிக்கப்படவுள்ளது. வடக்கில் நிலவிய யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த புகையிரத நிலையங்களில் முதன்முதலாக புனரமைக்கப்பட்ட புகையிரத நிலையம் ஓமந்தையாகும். போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம, இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றனர்.

## தமிழ் பொலிஸாருக்கு இடமில்லை

யுத்த வெற்றியின் இரண்டாம் வருட நிறைவை முன்னிட்ட கொண்டாட்டங்களின் அணிவகுப்பில் கலந்து கொள்ளவிருந்த தமிழ்ப் பொலிசார் அந்தக் கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். புலிகளுக்கு எதிரான யுத்தவெற்றியைக் கொண்டாடும் நிகழ்வில் பொலிஸ் அணிவகுப்பிற்கு தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் அவசியமில்லை என்று கொழும்பு மாவட்டத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அநுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மே 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.